




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 237 09.04.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 237 | Thursday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(9-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-26
பிறை: தேய்பிறை
திதி
சப்தமி இரவு 7.32 வரை
பிறகு அஷ்டமி.
நட்சத்திரம்:
மூலம் காலை 7.17 வரை
பிறகு பூராடம்.
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00 – 7.30 மணி
சூலம் – தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4–5 மணி.

மேஷம் ................ யோகம்
ரிஷபம் ................ தாமதம்
மிதுனம் ................ துணிவு
கடகம் ................ ஆர்வம்
சிம்மம் .............. நற்செயல்
கன்னி ................ ஜெயம்
துலாம் ................ லாபம்
விருச்சிகம் ............ நிம்மதி
தனுசு ................ புகழ்
மகரம் ................ போட்டி
கும்பம் .............. பொறுமை
மீனம் ............. கண்ணியம்

# இரண்டு வார போர் நிறுத்தத்துக்கு ஈரான் - அமெரிக்கா சம்மதம்

## ஹார்முஸ் நீரிணையை திறக்க ஈரான் ஒப்புதல்

**வாஷிங்டன், ஏப்.9:**

அமெரிக்காவும், இஸ்ரேலும் சேர்ந்து ஈரான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், தனது கட்டுப்பாட்டில் இருக்கும் உலகின் முக்கிய நீரிணையான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடிவைத்துள்ளது. இதனால் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் கப்பல்கள் உலகின் பிற நாடுகளுக்கு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய் சர்வதேச சந்தைக்கு வருவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் அதன் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதன் விளைவாக பல்வேறு நாடுகள் சமையல் எரிவாயு தட்டுப்பாடு, பெட்ரோல், டீசல் விலை உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், அனைத்து கப்பல் போக்குவரத்துக்காக ஹார்முஸ் ஜலசந்தியை திறக்க ஈரானுக்கு காலக்கெடு விதித்தார். இது குறித்து டிரம்ப் வெளியிட்டிருந்த பதிவில், "இன்றிரவு முழு நாகரீகம் (ஈரான்) ஒன்று அழிய போகிறது. அது மீண்டும் திரும்ப கொண்டு வர முடியாத அளவுக்கு இருக்கும். அது நடக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால், அதற்கான சாத்தியம் உள்ளது" என்று எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்தக் காலக்கெடு நேற்று அதிகாலை 5.30 மணியோடு நிறைவடைய இருந்தது.

இந்த சூழலில், ஈரானுக்கு விதித்த காலக்கெடுவை 2 வாரங்களுக்கு நீட்டிக்க டிரம்ப்புக்கு பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் வேண்டுகோள் விடுத்தார். இந்த சூழலில், டிரம்ப் தனது ட்ரூத் சோசியல் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் ராணுவ தளபதி ஆசிம் முனீர் ஆகியோருடனான உரையாடல்களின் அடிப்படையில், ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாகவும், உடனடியாகவும், பாதுகாப்பாகவும் திறப்பதற்கு ஈரான் ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், ஈரான் மீதான தாக்குதலை இரண்டு வார காலத்திற்கு நிறுத்தி வைக்க நான் ஒப்புக்கொள்கிறேன். இது ஒரு இருதரப்பு போர்நிறுத்தமாக இருக்கும்.

இவ்வாறு செய்வதற்கான காரணம் என்னவென்றால், ஈரானில் நாம் ஏற்கனவே அனைத்து ராணுவ இலக்குகளையும் அடைந்துவிட்டோம். மேலும், ஈரானுடனான நீண்டகால அமைதி மற்றும் மத்திய கிழக்கில் அமைதி தொடர்பான ஒரு திட்டவட்டமான உடன்படிக்கையை எட்டுவதில் வெகுதூரம் முன்னேறிவிட்டோம். ஈரானிடமிருந்து 10 அம்ச முன்மொழிவைப் பெற்றோம். அது பேச்சுவார்த்தைக்கு உகந்த அடித்தளமாக அமையும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அமெரிக்காவிற்கும், ஈரானுக்கும் இடையே கடந்த கால கருத்து வேறுபாடுகளின் பல்வேறு அம்சங்களும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஒப்பந்தத்தை இறுதிசெய்து நிறைவு செய்வதற்கு இரண்டு வார கால அவகாசம் தேவைப்படும்" என்று பதிவிட்டிருந்தார். மேலும், டிரம்ப் இதை ஒரு "இருதரப்பு போர் நிறுத்தம்" என்று குறிப்பிட்டுள்ளார்.


போர் நிறுத்தம் செய்யப்படும் இந்த இரண்டு வாரங்களுக்கு ஹார்முஸ் நீரிணையை திறக்க ஈரான் சம்மதித்துள்ளது.

இடைக்கால போர் நிறுத்தம் செய்ய உதவியதற்காக பாகிஸ்தானுக்கு ஈரான் நன்றி தெரிவித்துள்ள நிலையில், நிரந்தர போர் நிறுத்தத்திற்காக வருகிற ஏப்ரல் 10ம் தேதி இஸ்லாமாபாத்தில் அமைதி பேச்சுவார்த்தை நடத்த பாகிஸ்தான் ஏற்பாடு செய்துள்ளது.

முன்னதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தனது எக்ஸ் வலைதளத்தில், "மிகுந்த பணிவுடன் நான் அறிவிப்பது என்னவென்றால், ஈரான் இஸ்லாமியக் குடியரசும், அமெரிக்க ஐக்கிய நாடுகளும், அவற்றின் கூட்டாளிகளுடன் சேர்ந்து, லெபனான் மற்றும் பிற இடங்கள் உட்பட எல்லா இடங்களிலும் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டுள்ளன.

இந்த விவேகமான நடவடிக்கையை நான் மனதார வரவேற்பதோடு, இரு நாடுகளின் தலைமைகளுக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அனைத்துப் பிரச்சனைகளையும் தீர்த்து ஒரு உறுதியான உடன்படிக்கையை எட்டுவதற்காக, அவர்களின் தூதுக்குழுக்களை நாளை மறுநாள் (ஏப்ரல் 10, வெள்ளிக்கிழமை) இஸ்லாமாபாத்திற்கு வருமாறு அழைக்கிறேன். இரு தரப்பினரும் குறிப்பிடத்தக்க ஞானத்தையும் புரிதலையும் வெளிப்படுத்தி, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையின் நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதில் ஆக்கப்பூர்வமாக ஈடுபட்டுள்ளனர்.

'இஸ்லாமாபாத் பேச்சுவார்த்தைகள்' நீடித்த அமைதியை அடைவதில் வெற்றிபெறும் என்று நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம், மேலும் வரும் நாட்களில் இன்னும் பல நல்ல செய்திகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்" என்று பதிவிட்டிருந்தார்.



### ஹார்முஸ் நீரிணையை கடக்கும் கப்பலுக்கு கட்டணம் வசூலிக்க ஈரான் முடிவு

ஹோர்முஸ் நீரிணையைக் கடக்க ஒரு கப்பலுக்கு இந்திய மதிப்பில் ரூ.18.5 கோடி($2 million) கட்டணட் வசூலிக்கப்படும் என்று ஈரான் அறிவித்துள்ளது. போர் இழப்பீட்டை ஈடு செய்ய வசூலிக்கப்படும் இந்த கட்டணத்தை ஓமன் நாட்டுடன் பகிர்வோம் என ஈரான் தெரிவித்துள்ளது. கட்டணம் வசூலிக்க அனுமதிக்க வேண்டும் என்பது ஈரானி போர் நிறுத்த நிபந்தனைகளில் முக்கியமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைக்கிளில் 14 நாட்களில் எவரெஸ்ட் அடிவாரம் சென்ற முதல் இந்திய பெண்

**லக்னோ, ஏப்.9:**




உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூரை சேர்ந்த ஆசிரியை திவ்யா சிங் (28), சைக்கிளில் எவரெஸ்ட் அடிவார முகாம் (பேஸ் கேம்ப்) சென்றடைந்த முதல் இந்தியப் பெண் மற்றும் உலகின் 2வது பெண் என்ற சாதனையை படைத்துள்ளார்.

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் தனது பயணத்தை தொடங்கிய அவர், 14 நாட்கள் கடினமான பயணத்துக்கு பிறகு 17,560 அடி உயரத்தில் உள்ள அடிவார முகாமை வெற்றிகரமாக சென்றடைந்தார். இந்தப் பயணத்தின்போது, அவர் மைனஸ் 12 டிகிரி வரையிலான கடும் குளிர், குறைவான ஆக்சிஜன் மற்றும் அதிவேகக் காற்றை எதிர்கொண்டுள்ளார். திவ்யா தினமும் 10 முதல் 12 மணிநேரம் செங்குத்தான மற்றும் கரடுமுரடான மலைப் பாதைகளில் சைக்கிள் ஓட்டியுள்ளார்.

சைக்கிள் செல்ல முடியாத இடங்களில், அதை தோளில் சுமந்து கொண்டு முன்னேறினார். அடிவார முகாமை அடைய சலேரி, சுர்கே, பக்டிங், நம்ச்சே பஜார், லோபுச்சே, கோரக் ஷெப் ஆகிய சவாலான இடங்களை அவர் கடந்துள்ளார். அடிவார முகாமை திவ்யா சென்றடைந்த தருணத்தை உமா சிங் என்பவர் இன்ஸ்டாகிராமில் பகிர்ந்துள்ளார்.

அந்த வீடியோவில் திவ்யா, மலைகளின் பின்னணியில் தனது சைக்கிளுக்கு அருகில் தேசியக்கொடி ஏந்தியவாறு காணப்படுகிறார். இந்த வீடியோவுக்கான விளக்கத்தில், "வாழ்த்துக்கள் திவ்யா சிங்; சைக்கிளில் எவரெஸ்ட் அடிவார முகாம் சென்றடைந்த இந்தியாவின் முதல் பெண் மணி நீங்கள்தான். இது நமது கோரக்பூர், உ.பி. மற்றும் இந்தியாவுக்கு ஒரு பெருமையான தருணம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஏப். 9 முதல் ஏப். 29 வரை வாக்குக் கணிப்புகளை வெளியிடத் தடை

**புதுடெல்லி, ஏப்.9:**

கேரளம் உள்பட 5 மநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் இந்த மாதத்தில் நடைபெற உள்ள நிலையில், ஏப்ரல் 9-ஆம் தேதி காலை 7 மணி முதல் ஏப்ரல் 29 மாலை 6.30 மணி வரை வாக்குக் கணிப்புகளை நடத்தவோ அல்லது வெளியிடவோ தடை விதிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

'அவ்வாறு, குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வாக்குக் கணிப்புகளை நடத்துவதோ அல்லது ஒளிபரப்புவதோ மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-இன் பிரிவு 126ஏ-ஐ மீறும் செயலாகும். அதற்கு 2 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்த தண்டனை விதிக்கப்படும்' என்றும் தேர்தல் ஆணையம் எச்சரித்துள்ளது.

கேரளம், அஸ்ஸாம் மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வரும் 9-ஆம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ளது. தமிழகத்தில் வரும் 23-ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற உள்ளது. மேற்கு வங்க மாநிலத்தில் வரும் 23 மற்றும் 29-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவு நடைபெற உள்ளது.

வாக்குப் பதிவு நிறைவு பெறுவதற்கு 48 மணி நேரத்துக்கு முன்பாக, தேர்தல் நடைபெறும் தொகுதி அல்லது மாநிலங்களில் தேர்தல் பிரசாரத்தை கட்சியினர் நிறைவு செய்ய வேண்டும். அதன்படி, அஸ்ஸாமில் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கும், கேரளம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கும் அரசியல் கட்சிகளின் பிரசாரம் நிறைவுற்றது.

இந்த நிலையில், வாக்குக் கணிப்புகளை வெளியிடுவதற்கான கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

# தமிழகத்தில் 5.73 கோடி வாக்காளர்கள்: புதிதாக 6.35 லட்சம் பேர் சேர்ப்பு!



**புதுடெல்லி, ஏப்.8:**

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை (எஸ்.ஐ.ஆர்.) தேர்தல் ஆணையம் முன்னெடுத்தது. இதற்காக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வீடுதோறும் கணக்கீட்டுப் படிவம் வழங்கி 6.41 கோடி வாக்காளர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு டிச. 19-ஆம் தேதி வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியலில் 97,37,831 பெயர்கள் நீக்கப்பட்டன.

தகுதியானவர்களுக்கு மறுவாய்ப்பு அளிக்கப்பட்ட பிறகு இறுதி வாக்காளர் பட்டியல் வெளியானது. அதில் 5.67 கோடி பேர் இடம்பெற்றிருந்தனர்.

இதனிடையே, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின்னரும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டது. அதற்கு கடந்த மாதம் 26-ஆம் தேதி வரை அவகாசமும் வழங்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் படிவம் 6-ஐ சமர்ப்பித்து 6,48,285 பேர் விண்ணப்பித்திருந்தனர். அதில், 6,35,911 பேரின் பெயர்கள் தற்போது துணை வாக்காளர் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

அதையும் சேர்த்து பேரவைத் தேர்தலுக்கான ஒருங்கிணைந்த புதிய வாக்காளர் பட்டியல் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. அதில் மொத்தம் 5.73 கோடி வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

# திருவண்ணாமலையில் நடைபயிற்சியின்போது வாக்கு சேகரித்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

**திருவண்ணாமலை, ஏப்.9:**

தமிழக முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்து வருகிறார்.

ஏற்கனவே 2 கட்ட பிரசாரத்தை முடித்த அவர் 3-வது கட்ட பிரசாரத்தை புதுச்சேரியில் நேற்று முன்தினம் தொடங்கினார். நேற்றுஉ மு.க.ஸ்டாலின் மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்தார்.

இந்த நிலையில், இன்று திருவண்ணாமலை தேரடி வீதியில் கடலை கடை சந்திப்பில் இருந்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் நடைபயிற்சி மேற்கொண்டார். தங்கள் ஊரில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடைபயிற்சி மேற்கொண்டதை பார்த்த பொதுமக்கள் மகிழ்ச்சியில் ஓடி வந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.



பொதுமக்களின் அன்பால் திளைத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது வரவேற்வை ஏற்றபடியே தேரடி வீதியில் நடைபயிற்சி மேற்கொண்டார். அப்போது சாலையின் இருபுறங்களிலும் கூடிநின்ற பொதுமக்களிடம் திருவண்ணாமலை தொகுதியில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் அமைச்சர் எ.வே.வேலு, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சரை அருகில் பார்த்த உற்சாக மிகுதியில் அவருடன் கல்லூரி மாணவிகள், பொதுமக்கள் புகைப்படம் மற்றும் 'செல்பி' எடுத்துக்கொண்டனர். மேலும் காய்கறி மார்க்கெட்டிற்கு சென்ற முதலமைச்சர் அங்கு வியாபாரிகளின் குறைகளை கேட்டறிந்தார்.




# நடிகர்கள் பின்னால் செல்லும் இளைஞர்கள்; எச்சரிக்கிறார் ரஜினி



**சென்னை, ஏப்.09:**
இளைஞர்கள் போதைப்பழக்கத்துக்கு அடிமை ஆகக்கூடாது என நடிகர் ரஜினி தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் நிருபர்களிடம் ரஜினி கூறியதாவது: நடிகர்கள் பின்னால் செல்லும் இளைஞர்கள் தான் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களுக்கு ஏதாவது அடிபட்டால் அவர்களுக்கு தானே காயம் ஆகும். இளைஞர்களுக்கு படிப்பதில் மட்டும் தான் முழு கவனம் இருக்க வேண்டும்.

படிக்கிற டைமில் படிக்காமல் இருந்தால் வாழ்க்கையில் ரொம்ப கஷ்டப்பட வேண்டி இருக்கும். அதுமட்டும் மனதில் வைத்து கொண்டு இளைஞர்கள் படிப்பில் மட்டும் தீவிர சிந்தனை எல்லாம் இருக்க வேண்டும்.

முதலில் உடம்பை ஆரோக்கியமாக பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த டைமில் இளைஞர்களுக்கு முதலில் சொல்வது, தயவு இளைஞர்கள் குடிப்பழக்கத்திற்கும், கஞ்சா இதில் எல்லாம் நீங்கள் அடிமை ஆகாதீர்கள்.

அதில் அடிமையானால் உங்கள் வாழ்க்கையே கெட்டு போய்விடும். அது நீங்கள் மட்டுமல்ல உங்கள் சம்மந்தப்பட்ட தாய், தந்தை மற்றும் குடும்பம் என எல்லோருடைய வாழ்க்கையையும் நரகமாக்கிவிடும். அதனால் அது போன்ற நண்பர் கிடைத்தால் அவர்கள் கிட்ட கூட போகாதீர்கள். தூர விலகிவிடுங்கள். இவ்வாறு ரஜினி கூறினார்.

## தமிழ்நாடு தலைமைச் செயலாளர் முருகானந்தம் மாற்றம்

**சென்னை, ஏப்.09:**
தமிழக சட்டசபைக்கு வருகிற 23-ந்தேதி தேர்தல் நடைபெறுகிறது. இதனால் தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளன. இதனிடையே பண பட்டுவாடாவை தடுக்க தேர்தல் பறக்கும் படையினரும் அதிரடி சோதனையில் ஈடுபட்டு வருகின்றன.



இதற்கிடையே, தேர்தல் வாக்கு பதிவுக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், தமிழக தலைமைச் செயலாளராக இருந்த முருகானந்தத்தை மாற்றி சாய்குமாரை நியமித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தலைமைச் செயலாளராக புதிதாக நியமிக்கப்பட்டுள்ள சாய்குமார் உடனடியாக பதவியேற்க தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. சாய்குமார் தமிழ்நாடு காகித நிறுவனத்தின் தலைமை மேலாண் இயக்குநராக பணியாற்றியவர்.

மேலும் டி.ஜி.பி. சந்தீப் மிட்டல் ஆயுதப்படை மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை டி.ஜி.பி.யாக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## சிறுவனை தோளில் தூக்கிய விஜய்!



சிஎஸ்கே ஜெர்சி அணிந்த சிறுவனை தோளில் தூக்கிய விஜய்!

# ஆலங்குளத்தில் துப்பாக்கிச்சூடு

**எடப்பாடி பழனிசாமி கண்டனம்**

**சென்னை, ஏப்.09:**
அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் தொகுதியில் மருதம்புத்தூர் ஊராட்சியில் மணிகண்டன் என்பவர் பனைமரத்தில் பதநீர் இறக்கியபோது, கள் இறக்கியதாக பொய்ப் புகார் கூறியதால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் ஆலங்குளம் காவல் உதவி ஆய்வாளர் துப்பாக்கி சூடு நடத்தியதில், 2 துப்பாக்கி குண்டுகள் துளைத்து பனைமரம் ஏறும் தொழிலாளி மணிகண்டன் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வந்த செய்தி கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இச்சம்பவம் தமிழ்நாடு முழுவதுமுள்ள பனைமரம் ஏறும் தொழிலாளர்களிடையே பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் நேரத்திலும், எந்தவித கட்டுப்பாடுமில்லாமல் திமுக அரசின் காவல்துறை தொடர்ந்து ஏவல் துறையாக செயல்படுவது கண்டிக்கத்தக்கது.

பதநீர் இறக்கிய தொழிலாளி, கள் வடித்ததாக பொய் குற்றச்சாட்டு சுமத்தி, துப்பாக்கிச் சூடு நடத்திய காவல் உதவி ஆய்வாளர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழக காவல்துறை தலைமை இயக்குனர் அவர்களை வலியுறுத்துகிறேன்.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 4-வது கட்ட தேர்தல் பிரசாரம் அறிவிப்பு

**சென்னை, ஏப்.09:**
திமுக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தேர்தல் பிரசாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரசாரத்தை மு.க. ஸ்டாலின், கடந்த மார்ச் 31-ந்தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், நான்காம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 10-ந்தேதி தஞ்சாவூரில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மு.க.



ஸ்டாலின் நான்காம் கட்டமாக தஞ்சாவூரில் பரப்புரையை தொடங்குகிறார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்:

10.04.2026 (வெள்ளிக்கிழமை)

தஞ்சாவூரில் மாலை 5 மணி (பொதுக்கூட்டம்): திருவையாறு, தஞ்சாவூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, பாபநாசம், திருவிடைமருதூர், கும்பகோணம்

11.04.2026 (சனிக்கிழமை)

புதுக்கோட்டை மாலை 4 மணி (பொதுக்கூட்டம்) - கந்தர்வக்கோட்டை, விராலிமலை, புதுக்கோட்டை, திருமயம், ஆலங்குடி, அறந்தாங்கி

திருப்பத்தூர் மாலை 7 மணி (பொதுக்கூட்டம்) - காரைக்குடி, திருப்பத்தூர், சிவகங்கை, மானாமதுரை

12.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)

பரமக்குடி மாலை 4 மணி (பொதுக்கூட்டம்) - பரமக்குடி, திருவாடானை, ராமநாதபுரம், முதுகுளத்தூர்

தூத்துக்குடி மாலை 7 மணி (பொதுக்கூட்டம்) - விளாத்திகுளம், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஒட்டப்பிடாரம், கோவில்பட்டி.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# காலம் கடந்து திமுகவுடன் கூட்டணி: பிரேமலதா வருத்தம்

**விருத்தாசலம், ஏப்.09:**
திமுக தேமுதிக கூட்டணி தாமதமாக அமைந்துள்ளது. ஏன், இந்த கூட்டணி இவ்வளவு நாளாக அமையவில்லை என நான் வருத்தப்படுகிறேன் என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசியுள்ளார்.

விருத்தாசலத்தில் திமுக மேற்கு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான சி.வெ. கணேசன் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விருத்தாசலம் தொகுதியில் போட்டியிடும் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேசியதாவது: விருத்தாச்சலம் விருத்தகிரிஸ்வரர் கோயில் சாதாரண கோயில் அல்ல. பழைமை வாழ்ந்த கோயில் 2006-ம் ஆண்டு முதன்முறையாக கேப்டன் ஜெயித்தார். நான் அப்போதிலிருந்து கேப்டனுக்கு நிழலாகவே இருந்து வந்தேன். எங்களது திருமணத்தை கருணாநிதியும் மூப்பனாரும் முன் நின்று நடத்தி வைத்தனர்.



கருணாநிதி குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் அவ்வளவு பெரிய நட்பு உள்ளது. விஜய்காந்த் மேல் கருணாநிதிக்கு அவ்வளவு பாசம் இருந்தது.

இப்போது எங்கள் கட்சி மாவட்டச் செயலாளர்கள் விரும்பியபடி திமுகவுடன் கூட்டணி வைத்துள்ளோம். இந்தக் கூட்டணி 210 தொகுதிகளில் வெல்லும்.

மு.க.ஸ்டாலின் 2-வது முறையாக முதல்வராக பதவியேற்பார். திமுகவுடன் தேமுதிக கூட்டணி அமைக்க வேண்டும் என்பது பல ஆண்டுகளாக நினைத்த விஷயம். விஜயகாந்த்தும் கருணாநிதியும் இருந்தபோதே கூட்டணி அமைந்திருக்க வேண்டும். இப்போதுதான் வழி பிறந்திருக்கிறது. தாமதமாக திமுக தேமுதிக கூட்டணி அமைந்துள்ளது. ஏன், இந்த கூட்டணி இவ்வளவு நாளாக அமையவில்லை நான் வருத்தப்படுகிறேன். இன்று குடும்ப உறவு கூட்டணி உறவாக மாறி இருக்கிறது.இவ்வாறு அவர் பேசினார்.

# "பயந்தால் கடைசிவரை வீட்டைவிட்டு வெளியே வரமுடியாது" - விஜய்க்கு புத்தி சொன்ன சீமான்

**சென்னை, ஏப்.09:**
"அடக்குமுறை, ஒடுக்குமுறைக்கு அஞ்சுபவர் புரட்சியாளனாகவோ, வீரனாகவோ ஆக முடியாது. பயப்படக்கூடாது. பயந்தால் கடைசிவரை வீட்டைவிட்டு வெளியே வரமுடியாது" என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

சென்னையில் எழும்பூர், மயிலாப்பூர், அண்ணாநகர், வில்லிவாக்கம் தொகுதிகள் போட்டியிடும் நாதக வேட்பாளர்களை ஆதரித்து சீமான், நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது பேசிய அவர், "திமுக, அதிமுக மாறி மாறி ஆட்சி செய்கின்றன. ஆனால், ஆட்சி முறை மாறவில்லையே. அன்று அண்ணாவை தோற்கடிக்க காங்கிரஸ் கட்சி இரண்டு ரூபாய் கொடுத்தது. இன்று இரண்டு கட்சிகளும் சேர்ந்து ரூ.2 ஆயிரம் கொடுக்கின்றனர். ஜனநாயகத்தின் வலிமைமிக்க ஆயுதம் வாக்கு. அதை விற்கிறீர்கள் எனில் எங்கே இருக்கும் மக்களுக்கான அதிகாரம்?" என்று கேள்வி எழுப்பினார்.



பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: எங்களுக்கு வரும் கூட்டம் எங்களை பார்ப்பதற்காக வருவதில்லை. நாங்கள் என்ன பேசுகிறோம் என்பதை கேட்க வருகின்றனர். விஜய் வந்ததால் நாங்கள் பின்னுக்கு தள்ளப்படுவோம் என்கின்றனர். நாங்கள் ஒன்றும் ஆட்டுக்கல் அல்ல, பின்னுக்குத் தள்ளி விட்டு செல்வதற்கு. விக்கிரவாண்டி, ஈரோடு கிழக்கு இடைத் தேர்தல்களில் விஜய் நிற்காத நிலையில் அவரது வாக்குகளில் கொஞ்சமாவது எனக்கு விழுந்திருந்தால் 10 அல்லது 15 சதவீதம் கூடுதல் வாக்குகளை பெற்றிருக்க மாட்டேனா? எனக்கு வாக்கு செலுத்தியவர்கள் ரசிகர்கள் அல்ல.

விஜய் பிரச்சாரம் செய்வதற்கு நெருக்கடி கொடுக்கப்படுவதாக கூறுகின்றனர். நான் சந்திக்காத நெருக்கடிகளா? 260 வழக்குகளுக்கு மேல் வாங்கியிருக்கிறேன். நான் ஏறாத நீதிமன்ற படிக்கட்டு இல்லை. செல்லாத சிறையும் இல்லை. அடக்குமுறை, ஒடுக்குமுறைக்கு அஞ்சுபவர் புரட்சியாளனாகவோ, வீரனாகவோ ஆக முடியாது. பயப்படக்கூடாது. பயந்தால் கடைசிவரை வீட்டைவிட்டு வெளியே வரமுடியாது. மீறி வந்து பிரச்சாரம் செய்தால் என்ன செய்வார்கள்? வழக்குத்தானே போடட்டும். தடை அதை உடை அவ்வளவு தான். நெருக்கடிகளை தாண்டித் தான் வெல்லவேண்டும்.

காரைக்குடியில் சீமானுக்கு வீடும் கிடையாது. ஓட்டும் கிடையாது என எம்பி-யான கார்த்தி சிதம்பரம் கூறுகிறார். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி வயநாட்டில் போட்டியிட்டனர். அவர்களுக்கு அங்கு வீடு இருந்ததா? ஓட்டு இருந்ததா? இதே காங்கிரஸ் கட்சி தான் காஞ்சிபுரத்தை சேர்ந்த ஒருத்தரை மேலூர் வேட்பாளராக நிறுத்தியிருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# தே.மு.தி.க.வில் இருந்து மீசை ராஜேந்திரன் விலகல்!

**சென்னை, ஏப்.09:**
தேமுதிகவின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவரான மீசை ராஜேந்திரன், அக்கட்சியிலிருந்து விலகுவதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். கட்சியில் இருந்து தன்னை விடுவிக்குமாறு கோரி, தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்துக்கு அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.



முன்னதாக தேமுதிக சார்பில் 3 முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட இவருக்கு, இந்தத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாததால் அதிருப்தியில் இந்த முடிவை எடுத்ததாக கூறப்படுகிறது.

"கேப்டன் மன்றத்தில் 31 ஆண்டும், தேமுதிகவில் 21 ஆண்டும் உழைத்திருக்கிறேன், ஆனால், நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் தேமுதிக சார்பில் போட்டியிட எனக்கு வாய்ப்பு தரவில்லை" என்று கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்துள்ள தேமுதிக 10 இடங்களில் போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.

## மக்கள் நீதி மய்யத்தில் விருப்ப மனு கட்டணத்தை திரும்ப பெற்றுக்கொள்ளலாம் கட்சி தலைமை அறிவிப்பு

**சென்னை, ஏப்.09:**
திமுக கூட்டணியில் கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம் கட்சி அங்கம் வகித்து வருகிறது. சட்டப்பேரவை தேர்தலில் மநீம சார்பில் போட்டியிட 60 பேர் விருப்ப மனு கட்டணம் (ரூ.50 ஆயிரம்) செலுத்தியிருந்தனர்.



ஆனால், தேர்தலில் மநீம போட்டியிடவில்லை என்று கட்சித் தலைவர் கமல்ஹாசன் அறிவித்தார். தேர்தலில் போட்டியிட வாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்ப்பில் விருப்ப மனு கட்டணம் செலுத்தியவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இந்த நிலையில், விருப்ப மனு கட்டணம் செலுத்தியவர்கள் அந்த பணத்தை திரும்ப வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்ததாக சமூகவலைத்தளங்களில் செய்திகள் வெளியாயின. இதற்கு பதில் அளித்த மநீம மூத்த நிர்வாகிகள், விருப்ப மனு கட்டணம் திருப்பிக்கொடுக்க கூடியது அல்ல. அது கட்சி நிதிக்கு சென்றுவிடும் என்று விளக்கம் அளித்தனர். இது தொடர்பாக விமர்சனங்கள் எழுந்தன.

இதைத் தொடர்ந்து, தேர்தலில் போட்டியிட விருப்ப மனு கட்டணம் ரூ.50 ஆயிரம் செலுத்தியவர்களுக்கு அக்கட்டணத்தை திருப்பிக் கொடுக்க மநீம கட்சி முன்வந்துள்ளது. இதுதொடர்பாக விருப்ப மனு கட்டணம் செலுத்திய நபர்களுக்கு கட்சி தலைமை அலுவலகத்தில் இருந்து நேற்று அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில், 'தமிழக சட்டப்பேரவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட விருப்ப மனு தாக்கல் செய்திருந்தவர்கள் தாங்கள் செலுத்திய கட்டணத் தொகையை கட்சியின் தலைமை அலுவலகத்தில் ஏப்ரல் 8 (இன்று) முதல் 16-ம் தேதிக்குள் நேரில் வந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்' என கூறப்பட்டுள்ளது.

# "இது தமிழ்நாட்டிற்கும் டெல்லிக்குமான தேர்தல் தான்"

**அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன்**

**சென்னை, ஏப்.09:**
அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் கூறியதாவது:-

வருகின்ற சட்டமன்ற தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான தேர்தல் தான். அதற்கு மெட்ரோ விவகாரமே உதாரணம்.

மெட்ரோ போக்குவரத்து நெரிசலை குறைக்க பெரிய மாநகரங்களுக்கு அவசியம் தேவை. வளர்ச்சி வங்கிகள் மெட்ரோ போன்ற திட்டங்களுக்கு உடனடியாக கடன் உதவி கொடுப்பார்கள்.

தென்னிந்தியா தான் கூடுதல் வரி செலுத்துகிறோம். நமது வரியை வைத்து மிகப்பெரிய அரசியல் செய்வது பாஜக தலைமையிலான என்டிஏ அரசாங்கம்.



கொடுக்க வேண்டிய ரூ.2,000 கோடி கல்வித்துறை நிதியை கொடுக்காமல் அரசியல் செய்கிறார்கள். ஏதேதோ நிபந்தனைகள் மூலம் மும்மொழிக்கொள்கையை சொல்லி நிதியை கொடுக்க மறுக்கிறார்கள்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கின் அவமதிப்பு மனுக்களை தனி நீதிபதி விசாரிக்க தடை

**மதுரை, ஏப்.09:**
திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கின் அவமதிப்பு மனுக்களை தனி நீதிபதி விசாரிக்க இடைக்கால தடை விதித்து உயர் நீதிமன்ற அமர்வு விதித்துள்ளது.

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவு நிறைவேற்றப்படாத நிலையில், மதுரை மாவட்ட ஆட்சியர், மாநகர் காவல் ஆணையர், காவல் துணை ஆணையர், திருப்பரங்குன்றம் கோயில் செயல் அலுவலர் ஆகியோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த அவமதிப்பு மனுக்களை விசாரித்த தனி நிதிபதி பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்தார். இதற்கு எதிராக அரசு தரப்பிலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரப்பிலும் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டன.



இந்த மனுக்கள் அனைத்தும் நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. கூடுதல் அரசு வழக்கறிஞர்கள் வீராகதிரவன், ரவீந்திரன் ஆகியோர், 'நீதிமன்ற அவமதிப்பு வழக்கை விசாரிக்க இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்த பிறகும் தனி நீதிபதி தொடர்ந்து விசாரணை நடத்திவருகிறார்.

டிச.4 உத்தரவுக்கு தான் தடை விதிக்கப்பட்டுள்ளது. முழு அவமதிப்பு நடவடிக்கைக்கும் தடை விதிக்கவில்லை என்று கூறி தனி நீதிபதி விசாரணையை நாளைக்கு (ஏப்.9) தள்ளிவைத்துள்ளார்' என்றனர்.

தர்கா தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் மோகன், வாஞ்சிநாதன் ஆகியோர், 'திருப்பரங்குன்றம் கார்த்திகை தீபம் வழக்கில் உத்தரவு பிறப்பித்த தனி நீதிபதி, தனியார் நிகழ்ச்சியில் பங்கேற்று மாதிரி தீபத்தூணில் தீபம் ஏற்றியுள்ளார். இந்த வழக்கு தொடர்பான பொருளுடன் நீதிபதி இணைந்துவிட்டார். எனவே, நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை அந்த நீதிபதி விசாரிக்கக் கூடாது. மேலும் நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் தர்கா நிர்வாகம் மீதும் வழக்கு பதிவு செய்ய தனி நீதிபதி உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவுக்கு தடை விதிக்க வேண்டும்' என்றனர்.

பின்னர் நீதிபதிகள், 'இந்த வழக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு. இதில் அவசரம் காட்ட முடியாது. இந்த விவகாரத்தில் நீதிமன்றத்தை அரசியல் மேடையாக மாற்ற வேண்டாம். இது சிறிய பிரச்சினை, ஊதி ஊதி பெரிய பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது. மேல்முறையீடு மனு மீது இரு நீதிபதிகள் ஏற்கெனவே இறுதி உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

அதன் பிறகும் தனி நீதிபதியின் உத்தரவை மிகைப்படுத்துவது ஏன்? இந்த வழக்கில் நீதிமன்றத்தில் யாரும் குரலை உயர்த்தி பேசி நீதிமன்றத்தை மிரட்டும் நோக்கத்தில் பேசக் கூடாது. இந்த வழக்கில் சட்டத்தின் அடிப்படையில் மட்டுமே முடிவெடுக்கப்படும்.

தனி நீதிபதியின் உத்தரவுக்கு இரு நீதிபதிகள் அமர்வு தடை விதித்த பிறகு, தனி நீதிபதி விசாரிக்க முடியாது. அந்த வழக்கு தானாக இரு நீதிபதிகள் அமர்வுக்கு வந்துவிடும்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை தனி நீதிபதி விசாரிக்க வேண்டுமா அல்லது இரு நீதிபதிகள் அமர்வு விசாரிக்க வேண்டுமா என்பதை இந்த நீதிமன்றம் விசாரித்து உரிய முடிவெடுக்கும் வரை திருப்பரங்குன்றம் தீபத்தூண் வழக்கில் நீதிமன்ற அவமதிப்பு மனுக்கள் மீது தனி நீதிபதி பிறப்பித்த அனைத்து உத்தரவுகளுக்கும் இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. விசாரணை ஜூன் 4-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது' என உத்தரவிட்டனர்.

# WANTED

வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106

---

# ADVERTISE WITH US

CONTACT US
9438610756

---

## WANTED: FEMALE ANCHORS

- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000

Call / Whatsapp:
7789941009
9337501889



---

# ! WANTED !

## Muslim Lady Accounts Assistant

**Qualification:** B.Com / Tally Knowledge Required

**Company:** Perfume Manufacturing Company

**Location:** Chrompet



Contact: 99401 46318

---

உங்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு

உங்கள் ஜோதிடர் 9940374962

## D.சக்திவேல்

அனுபவம் வாய்ந்த பாரம்பரிய ஜோதிடர்

- கைரேகை ஜோதிடம் (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
- முகக் குறிப்பு
- கண் பார்வை கணிப்பு (ஆண்களுக்கு வலது, பெண்களுக்கு இடது)
- வீடு மனை வாங்க விற்க அணுகவும்
- நல்ல நேரங்கள் கணிப்பு
- ராகு காலங்கள் பற்றிய தெளிவு

இன்றே அழையுங்கள்: D. சக்திவேல் - 9940374962

**கவனத்தில் கொள்க:**

- குளிகை காலம் நல்ல விவகாரங்கள் செய்தால் மேலும் வளர்ச்சி
- இராகு காலம் முடிந்த பிறகு நல்லது செய்யவும்
- எமகண்ட காலத்தில் வைத்தியம் பார்க்கக் கூடாது.

---

## Vilambaram

We provide Targeted Leads to grow your buisness

Boost your business

Call:: 91 7789941009, 9337501889

www.vilambaram.com



---

## keerthi foundation

De Addiction Cum Rehabilitation Centre

### INTERNSHIP & JOB OPPORTUNITIES

MSW & M.Sc Psychology – Freshers

**Internship:**
- Clinical Training
- Counseling Practice
- Case Work

**Jobs:**
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care

Call: 9841945060 | 7845027710

www.keerthifoundation.com

---

# WANTED

## JAY SECURITY FORCE

பணி வாய்ப்புகள்

- பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
- இடங்கள்:
  - பெருங்குடி, துரைப் பாக்கம்
  - காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
  - விருகம்பாக்கம்

பெண்கள் தேவை

சம்பளம்:- 12500 முதல் 20000 வரை

9791061354 - 8072969599

Head office

NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

---

# ஆட்கள் தேவை

வார சம்பளத்திற்கு

லேபர் வேலைக்கு ஆட்கள் தேவை

உணவு மற்றும் தங்கும் இடம் இலவசம்

OMR பெருங்குடி சென்னை

Contact 9790979539

---

## PREMIUM LAND SALE NEAR PARANDUR AIRPORT

YOU ARE LUCKY!

Grab Your Future Investment Today!

Location: Just 6 KM Near Parandur New Airport



**Price Details**
- ₹700 to ₹2200 per Sq.Ft
- Affordable & High Return Investment

**Why Invest Here?**
- Fast Developing Area
- Near Upcoming Airport
- Excellent Appreciation Value
- Suitable for Residential & Investment
- Easy Road Access

PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847

LIMITED PLOTS – BOOK NOW!

---

# WANTED:

செக்யூரிட்டி வேலைக்கு ஆண்கள் தேவை

- வானகரம் பைபாஸ் ரோடு
- முகப்பேர்
- அம்பத்தூர்
- பட்ரவாக்கம்
- பெரம்பூர்
- மாதவரம்
- திருமுல்லைவாயல்

Ph. 9344183870
Ph. 8807470107

Call now for more details and interview.

APPLY NOW

---

## SEVEN STARS LOGISTICS PVT.LTD.

We Build Perfection

we simplify shipping for your business

**Our Services are ...**
Freight Forwarding, International Courier, Customs Clearance, Cargo Movement by Air, Sea and Road, Door to Door Service.



# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town, Chennai - 600 001. INDIA.

+91 44 43570909 +91 96770 88843

info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com

---

## just499®

## MLM SOFTWARE

All Types of MLM Software Solutions Available

Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment

ONLY Rs. 499

Website: just499.com

Phone/WhatsApp: 7789951009

Email: orderjust499@gmail.com

---

## Sir Manjal Mart

YOUR DESIRE WE DELIVER

20% OFF

தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க

www.manjalmart.com

7789951009

order@manjalmart.com

---

THE BEST CENTRE OF CAR WASH

SADHANA DEVI.K

## SUPREME

Car Wash & Detailing

- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here

9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com

No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.

---

# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift

7540003588

---

அருள்தரும் தெய்வம்

தமிழ் மாதமிருமுறை இதழ் — என்றும் நம் இல்லங்களில்

www.arultharumdeivam.com

அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..

---

# WANTED

Retd, VRS, Home Makers, NRIs, Business Person

Contact

8248951872



## கவிதை அரங்கம்!




நினைவே
நீயானபின்
மனதுக்கு
ஏது ஓய்வு

கரையோடு
உரையாடும்
அலைப்போல்
கடலிருக்கும்வரை
தொடர்ந்திட வேண்டும்
நம் உறவும்...!

உனக்காக
தவிப்பதுதான்
காதலென்றால்
சுகமாக ஏற்றுக்கொள்வேன்
காலமெல்லாம்...!

கையளவு
இதயத்திலேயே
சுகமாக
சுமந்திருப்பவனுக்கு
கரங்களில் மட்டுமென்ன
சுமையாகவா
தெரியபோகிறேன்

## வாழ்க்கை தத்துவம்...



முட்களையும் ரசிக்க
கற்றுக்கொள் வலிகளும்
பழகிப் போகும்

எண்ணங்கள் ஈடேற
வேண்டுமென்றால்
நல்ல எண்ணங்களை
மட்டுமே விதைக்க
கற்றுக்கொள்

கிடைக்காத ஒன்று தான்
சிறந்தது என நினைத்துக்
கொண்டிருந்தால் கையில்
இருப்பது எப்போதுமே
சிறப்பாக தெரியாது

ஆயிரம் பேர் ஆயிரம்
பேசுவார்கள் அந்த
ஆயிரத்துக்கும் பதில்
சொல்ல ஆரம்பித்தால்
ஆயுளும் போதாது

# பேசும் ஆலமரம்.....!

"சங்கீதா எங்கேடி போறே...நானும் வரேன்டி"என நித்தியா சங்கீதா பின்னாடி சென்றாள்
அக்கா...ஆலமரத்துக்குத் தானே போறே... நானும் வர்றேக்கா...
என கேட்டுக்கொண்டே ரங்கனும் அவர்களுடன் இணைந்து கொண்டான்
"வர்றவங்க வாங்க எல்லோரும் ஆலமரத்தில போய் சேர்ந்தே விளையாடுவோம்"
சங்கீதா நடந்து கொண்டே சொல்ல அவர்களோடு மற்றவர்களும் சேர்ந்து கொண்டனர்.
ஆலமரத்திற்கு வரவும் எல்லோருக்கும் குதுகலம் கொண்டாட்டமாய் சிரித்து மகிழ்ந்தனர்
எட்டும் தூரத்தில் இருந்த விழுதுகளைப் பிடித்து ஊஞ்சலாடினர்
சிறுவர்கள் ஆல மரத்தின் பட்டைகளைப் பிடித்து கிளைகளில் ஏறி அமர்ந்து கொண்டு சின்னச் சின்ன சிவப்பு பழமாய் இருந்த ஆலம் பழத்தை பறித்தனர்
பறவைகளும்,இவர்களை வேடிக்கை பார்த்தபடி கிளைக்கு கிளை பறந்து மகிழ்ந்து கொண்டன அப்போது அங்கு வந்த பெரியவர்

"பேராண்டி கீழே விழுந்திடாமல் விளையாடுங்கள் வழிவழியாய் வரும் வாரிசுகளுக்காக இந்த ஆல மரத்த காப்பாத்திட்டு வர்றோம்" என சொல்லவும்

"தாத்தா ஆல மரத்தைப் பற்றிச் சொல்லுங்கய்யா நாங்களும் கேட்டுத் தெரிஞ்சுக்குறோம்" என்று சங்கீதா அவர் அருகில் வந்து கேட்க சுற்றி இருந்த மற்ற பசங்களும் சேர்ந்து கொண்டு தாத்தா கொஞ்சம் சொல்லுங்க தாத்தா என்று கேட்கவும்

தாத்தா தோளில் இருந்த துண்டை உதறி தரையில் இரண்டு தடவை தரையை வீசியவர் பின் துண்டை விரித்து அதன் மேல் ஆலமரவிழுது ஒன்றில் சாய்ந்து அமர்ந்து கொண்டு
"எல்லோரும் உட்காருங்க..."என்று சொல்லவும்
அவர் எதிரே அமர்ந்து கொண்டனர்
பெரியவர் கையை உயர்த்தி வட்ட வட்டமாய் செய்தார்
"என்ன தாத்தா பண்ணிக்க"என சிறுமி கேட்டாள்

"அதாவது 50 ஆண்டு பின்னோக்கி போறேன்ல அதா வட்ட வட்டமா செய்து காண்பிக்கிறே"ன்னு தாத்தா சொல்லவும்

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர்
"நான் சிறுவனாய் இருக்கும் போது இப்ப இருக்கிற மாதிரி இந்த ஆலமரம் பெரிசா இல்ல ஒருபக்கம் ஆத்துல வெள்ளம் வந்து மண் அரிப்பு ஏற்பட்டு ஆலமரம் சாய்ந்து ஆத்து வெள்ளத்துல அடிச்சுட்டு போய்விடுமோ இந்த மரத்த காக்கனுமென ஒண்ணுகூடி பேசி வீட்டுவீடு பணம் சேர்த்து அரசாங்கத்திடமும் பணம் கைட்டு வாங்கி வீட்டு ஒருவர் சேர்ந்து வேலை செய்யனும் முடிவு பண்ணினோம் "
அப்புறம் தாத்தா...

பெரிய பெரிய பாறை கற்களை கொண்டு வந்து மரத்திலிருந்து இருபதடி தூரத்திற்கு ஒரு பக்கமா தடுப்பு சுவர் பத்தடி உயரத்திற்கு மேலே எழுப்பினோம்
காற்று இதமாய் வீச சிறுவர் சிறுமியர் கண் இமைகள் ஒன்றுடன் ஒன்று இணைவதும் பின் விலகுவதுமாக இருந்ததைப் பார்த்த பெரியவர் "எல்லோருக்கும் நான் சொல்றது தாலாட்டு பாடுவது போல் இருக்கா..." என்று கேட்கவும்

"ஆமா தாத்தா...."
"சரி அப்போ எல்லோரும் தூங்குங்க இனி வரும் திருடன் கதை எல்லாம் சொல்லமாட்டேன்" என்று சொல்லுவும்
இல்லே..இல்லே... தூக்கம் வரல,நீங்க சொல்லுங்க தாத்தா என்று சிறுமிகள் சொல்லவும்
"பாப்பா தூக்கம் வந்த நல்ல தூங்கிறனும் அப்போத்தா உங்கள் உடம்பு நல்லது வயசு ஆக ஆக அப்புறம் தூங்கப் போனாக் கூட தூக்கம் வராது" என்று தாத்தா சொல்வதைக் கேட்டு
"தாத்தா காத்து நல்ல வரவும் அப்படியே கண்ணைச் சொருகுது தாத்தா"

பெரியவர் ஆலமரத்தின் கதையைத் தொடர்ந்தார்
"சுவர் கட்டியதும் வயக்காட்டில் இருந்து மண் அள்ளி மேடாக மெத்தி தண்ணீர் விட்டு நன்றாக பள்ளம் இல்லாமல் மேடாக அமைத்தோம் இப்போ நீங்க பார்கிறீங்களே ...
அந்த மண்ணில் மரமாய் நிற்கும் இந்த விழுதுகள் எல்லாம் வளர்ந்து மண்ணில் புதைந்து
வளர வளர கிளைகள் படர்ந்தன மரமும் உயரமாய் வளர்ந்தோங்கி ,பறவைகள் ஆலமரத்தை தேடி வந்து கூடுகட்டி வாழத் தொடங்கின " என்றார் தாத்தா

"தாத்தா திருடன் கதை சொல்றேன்னு சொன்னிங்க "என்று நித்திய கேட்க,

"ஆமா,இனிமேல்தான் சொல்லுவே" அப்போ எல்லாம் ஆல மரத்துப் பக்கம் வரமாட்டோம் ஏன்னா ஆத்துப் பக்கம் பேய் பிசாசு நடமாடும்னு புரளிய கிளம்பி விட்டாங்க..."

"தாத்தா பேய் எல்லாம் வருமா..."
"அப்படின்னு பொய்யா சொல்லி ஆலமரத்துப் பக்கம் யாரையும் வர விடாம திருடங்க ஆல மரத்துல வந்து தங்கி இங்கேயே படுத்து தூங்கி எழுந்திருச்சு போவாங்க,பகல்ல ஆத்துப்பக்கமா வந்து பார்த்தா காகிதமும், இலையுமா.... உணவு பொருளெல்லாம் சிதறி கிடக்கும் நாங்க எவனோ வந்து தங்கி சாப்பிட்டுட்டு போயிருக்கான்னு நினச்சு இருந்துட்டோம்

எல்லோரும் மேலே பார்த்து அதிர்ச்சி அடைந்தனர்
கயிரால் கட்டியவர்களும் ஆச்சரியமடைந்தனர் எப்படி யார் செய்தது என குழப்பிக் கொண்டு இருந்தனர்
இரண்டு திருடர்களையும் விழுதின் வேர்கள் பின்னி பிணைந்து கொண்டு இருந்தது "மேலே ஏறி கயிறை அவுருங்கப்பா" என்று சொல்ல

ஒருவர் ஏறி கயிறை அவிழ்த்து விடவும் பின்னிய வேர்களும் தானாக பின்னியதை விடுவித்து விலகிக் கொண்டு இருந்தது மரத்தில் இருந்து மெதுவாக இறக்கிட கால் கட்டை மட்டும் அவிழ்த்து விட்டனர் திருடர்களின் கைகள் கால்களில் வேர்கள் பின்னி இருந்தது சிவப்பாய் தடமாய் இருந்தது
அப்போது "தவறு செய்பவர்களுக்கு உடனே தண்டிக்கப் படவேண்டும் இவர்கள் திருந்தி உழைத்து வந்தால் தானாக உடலில் ஏற்பட்ட காயங்கள் மறையும் இவர்களை இந்த ஊரிலேயே உழைத்திட வழி வகை செய்யுங்கள் இவர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியத்தை கொடுங்கள் அதை வைத்து அவர்களுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்ளட்டும் யாரும் சாப்பிட கொடுக்கக் கூடாது "என்று கூறியதைக் கேட்டதும் உடல் சிலிர்த்திட எல்லோரும் கையை மேலே தூக்கி வணங்கத் தொடங்கினர்
எவர் மனங்களில் தீய செயல் வளர்ந்து தவறு செய்தால் இந்த விழுதில் கட்டி வையங்கள் தண்டனை வழங்கும் இவர்கள் கொண்டு வந்த பொருளை உரியவர்கள் தேடி வந்தால் கோயில் அம்மன் முன் வைத்து விடுங்கள் அவர்களுடையதை எடுத்தால் நலமாய் செல்வார்கள் தவறு செய்தால் கைகள் எரிச்சல் ஏற்பட்டு தண்டிக்க படுவார்கள் "என்று சொல்லி ஒரு கிளை மட்டும் அசைந்திட அதிலிருந்து சில இலைகள் மண்ணில் விழுந்து மறைந்தது

சற்று நேரம் அமைதி நிலவியது ஊரார் எல்லாம் சற்று நேரம் பிரம்மை பிடித்தவர்கள் போல் நின்றனர்
ஒருவரைப் பார்த்தனர் பின் எல்லோரும் ஆலமரத்தடியில் விழுந்து வணங்கினர் என்று தாத்தா சொல்லியதைக் கேட்டதும்

சிறுவர் சிறுமியர்கள் ஆல மரத்தை அன்னாந்து பார்த்தனர்
"தாத்தா நாங்கள் மரத்தில் ஏறி விளையாடி வருகிறோம் எங்களை எதுவும் தண்டிக்கலையே"

"நீங்கள் எல்லாம் ஆல மரத்தின் குழந்தைகள்
தவறு செய்தால் மட்டுமே தண்டிக்கப் படுவார்கள் இப்போ எல்லாம் ஆல மரத்திற்கு போறேன்னு சொன்னா யாரும் தடுக்க மாட்டார்கள் தானே" என சொல்லவும்
"ஆமா தாத்தா ஆலமரத்த விட்டு எங்கேயும் போகக்கூடாது ன்னு சொல்லு வாங்க" என்றாள் நித்தியா

"இப்போ தவறு எதுவும் நடக்குதா" என்று சங்கீதா கேட்க
"கஷ்டங்கள் வந்தால் தானே தவறு செய்ய மனசு தூண்டும்" எல்லோரும் உழைக்கிறாங்க எதாவது தேவை என்றால் ஊர் பெரியவரிடம் சொன்னால் அவர்கள் தேவையை செய்து கொடுப்பார்கள்" என்று சொல்ல
"ஆமாம் ஆல மரத்தில் உள்ளவை எல்லாம் மருத்துவ குணமானது"
அடி பட்டு காயங்கள் ஏற்பட்டாலும் வீக்கங்கள் ஏற்பட்டாலும் ஆல மரப்பட்டை தட்டி அதை வைத்து கட்டினால் காயங்கள் ஆறும்,தோல் நோய்கள் இருந்தால் மாறும் அதோடு ஆலமரத்துப் பால் பல்வலியை போக்கும்,பழங்கள் சாப்பிட கொழுப்பு சத்துக்கள் கிடைக்கும் ஆலமரத்தின் வேர்,இலைகளை கசாயம் வைத்து சாப்பிட வயிற்றுப் போக்கு சரியாகும் அதோடு நிரழிவு நோய்,சர்க்கரை நோய் குணமாகும் இந்த ஆல மரம் இருந்தால் எல்லோருக்கும் நல்லதே நடக்கும்

"தாத்தா நாங்க வீட்டுக்கு போறோம்" "சரி குழந்தைகளா எல்லோரும் போயிட்டு வாங்க" வீட்டுக்கு போகும் போது எல்லோரும் ஆலமரத்தைத் திரும்பிப்பார்த்தனர் வானுறத்திற்கு பரந்து விரிந்திருந்த ஆலமரம் பிரமாண்டமாய் கண்களை ஆச்சரியப்பட வைத்ததைப் பார்த்து கை அசைத்து டாடா காண்பிக்க ஆலமரம் கிளைகளை அசைத்தது

தலைமுறை தலைமுறையாய் நமது பண்பாடு,பாரம்பரியம் கட்டிக்காக்கனும் என ஆல மரத்தின் கதையைச் சொன்ன திருப்தியில் ஆலமரக்கிளைகள் அசைந்து காற்றின் பரிசத்தில் தரையில் சாய்ந்து ஓய்வெடுத்தார் தாத்தா.
மரத்தில் மேல் இருந்த பறவைகள் இசையொலி எழுப்பி தாலாட்டு பாடின.

**நல.ஞானபண்டிதன்**



## சிரிப்பு வருது..!
## சிரிப்பு வருது..!!

*நண்பன்: ஏன் சார், உங்க மொபைல் போனை மிக்ஸியில போட்டு சுத்திக்கிட்டு இருக்கீங்க?*

*சர்தார்ஜி: வேற ஒன்னுமில்லை தம்பி, போன்ல இருந்து 'இன்கமிங்' (Incoming) கால் வர மாட்டேங்குது, அதான் 'மிக்ஸிங்' (Mixing) பண்ணிப் பார்க்குறேன்!*



## தினம் ஒரு சமையல்



# புடலங்காய் பொரியல்

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| 1 | -புடலங்காய் |
| 1/2 | -ஸ்பூன் கடுகு |
| 1/2 | -ஸ்பூன் கடலை பருப்பு |
| 1/2 | -ஸ்பூன் உளுத்தம் பருப்பு |
| 3 | -வரமிளகாய் |
| 1/2 | -பின்ச் மஞ்சள் தூள் |
| தேவைக்கு ஏற்ப | -உப்பு |
| 2 ஸ்பூன் | -தேங்காய் துருவல் |
| 4 பல் | -பூண்டு |
| கறிவேப்பிலை | |

செய்முறை:

புடலங்காயை கழுவி விட்டு அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும்

என்னை ஊற்றி கடுகு கடலைப்பருப்பு உளுத்தம் பருப்பு வரமிளகாய் கருவேப்பிலை பூண்டு போட்டு தாளிக்கவும்

பருப்புகள் சிவந்தவுடன் அதில் புடலங்காயை போட்டு அதில் உப்பும் மஞ்சளும் போட்டு சிறிது நேரம் வணக்கம் பிறகு தண்ணீர் விட்டு வேக வைக்கவும்

இந்த உடன் அதன் மேல் தேங்காய் துருவல் போட்டு இறக்கவும் புடலங்காய் பொரியல் ரெடி.



## அசோகு பயன்கள்



அசோகு மரம் (SARACA ASOCA) ஆயுர்வேதத்தில் பெண்களின் ஆரோக்கியத்திற்கு, குறிப்பாக மாதவிடாய் கோளாறுகள் மற்றும் கருப்பை சார்ந்த பிரச்சனைகளுக்கு சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. இதன் பட்டை, இலைகள், மற்றும் பூக்கள் அலர்ஜி எதிர்ப்பு, தோல் நோய்களை குணப்படுத்துதல், சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துதல், மற்றும் வலி நிவாரணியாகச் செயல்படுகின்றன.

அசோக மரத்தின் முக்கிய பயன்கள்:

மாதவிடாய் கோளாறுகள்: அசோகப் பட்டை, மாதவிடாய் சுழற்சியை சீராக்கவும், அதிக இரத்தப்போக்கு மற்றும் மாதவிடாய் வலி (DYSMENORRHEA) ஆகியவற்றைக் குறைக்கவும், APOLLO 247, 1MG படி, உதவுகிறது.

பெண்களின் ஆரோக்கியம்: இது கருப்பை தசைநார் கட்டிகள், நீர்க்கட்டிகள் (PCOS) மற்றும் தோல் சார்ந்த வெள்ளைப்படுதல் (LEUCORRHEA) சிகிச்சைக்கும், DEEP AYURVEDA மற்றும் 1MG படி, பயன்படுத்தப்படுகிறது.

சர்க்கரை நோய் கட்டுப்பாடு: அசோக இலைகள் இன்சுலின் உணர்திறனை அதிகரித்து, இரத்த குளுக்கோஸ் அளவைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.

தோல் ஆரோக்கியம்: அசோகப் பட்டை விழுது தோல் அலர்ஜி, புண்கள் மற்றும் காயங்களைக் குணப்படுத்தப் பயன்படுகிறது.

மூல நோய் மற்றும் வலி நிவாரணம்: இதன் பட்டை மூல நோயினால் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கவும், மூட்டு வலிகளுக்கு நிவாரணம் அளிக்கவும், APOLLO 247 மற்றும் 1MG படி, உதவுகிறது.

மன அழுத்தம்: இது நரம்பு மண்டலத்தை அமைதிப்படுத்தி மன அழுத்தம் மற்றும் பதற்றத்தைக் குறைக்க உதவும் பண்புகளைக் கொண்டுள்ளது, APOLLO 247 படி, அமைகிறது.

குறிப்பு: இந்த மருத்துவத் தகவல்கள் மருத்துவ ஆலோசனைக்கு மாற்றானவை அல்ல. ஏதேனும் கடுமையான உடல்நலப் பிரச்சனைகளுக்கு, ஒரு தகுதியான ஆயுர்வேத மருத்துவர் அல்லது மருத்துவரை அணுகி ஆலோசனை பெறுவது நல்லது.

# சினிமாவில் நாயகியாக என்ட்ரி ஆகும் நடிகை தேவயானி மகள்... யாருடைய படம் தெரியுமா?



தமிழ் சினிமாவில் 90 காலகட்டத்தில் முன்னணி நாயகியாக கலக்கியவர் நடிகை தேவயானி.

தமிழை தாண்டி தெலுங்கு, மலையாளம் மற்றும் ஹிந்தி உள்ளிட்ட மொழிகளில் நிறைய திரைப்படங்கள் நடித்துள்ளார். அலட்டிக்கொள்ளாத நடிப்பு, குடும்ப பாங்கான கதை என நடித்து இப்போதும் மக்களால் கொண்டாடப்படும் நடிகையாக உள்ளார்.

இவரது திரைப்பயணத்தில் பெரிய ரீச் கொடுத்தது என்றால் காதல் கோட்டை, சூர்ய வம்சம், ஃபிரண்ட்ஸ் உள்ளிட்ட படங்களை கூறலாம். சின்னத்திரையில் களமிறங்கியவருக்கு கோலங்கள் சீரியல் தேவயானிக்கு மக்களிடம் மிகப்பெரிய இடத்தை பெற்றுத்தந்தது.

நடிகை தேவயானி மகன் இனியா பாடும் திறமை கொண்டவர், இவர் ஜீ தமிழில் ஒளிபரப்பான சரிகமப நிகழ்ச்சியில் போட்டிபோட்டார், ஆனால் இறுதிவரை வரவில்லை. தற்போது தேவயானியின் இளைய மகள் பிரியங்கா நாயகியாக என்ட்ரி கொடுக்க உள்ளார்.

தெலுங்கில் வெளியாகி பெரிய வெற்றியைப் பெற்ற கோர்ட் திரைப்படம் தமிழில் ரீமேக் ஆகியுள்ளது. அப்படத்தை தியாகராஜன் இயக்க பிரசாந்த் வழக்கறிஞராக நடித்துள்ளாராம்.

தயாரிப்பாளர் 5 ஸ்டார் கதிரேசனின் மகன் ஹிருத்திக் மற்றும் நடிகை தேவயானி மகன் பிரியங்கா ஆகியோர் நாயகன், நாயகியாக நடித்துள்ளனர். படத்திற்கு தற்போது ரஞ்ஜன் என பெயரிடப்பட்டுள்ளதாக இன்று அறிவித்துள்ளனர்.






தற்போது சேலையில் கலர்ஃபுல் போட்டோஷூட் நடத்தி அந்த புகைப்படங்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். இதோ அந்த புகைப்படங்கள்:

# சினிமா குறித்து நடிகை த்ரிஷா எடுத்துள்ள அதிர்ச்சி முடிவு... பிரபலம் சொன்ன ஷாக்கிங் தகவல்



தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகையாக ரசிகர்களால் கொண்டாடப்படும் நடிகை த்ரிஷா.

தமிழை தாண்டி தெலுங்கு, மலையாளம், கன்னடம் என எல்லா மொழிகளிலும் நடித்துள்ளார். கடந்த 2002ம் ஆண்டு சூர்யா நடிப்பில் வெளியான மௌனம் பேசியதே படத்தின் மூலம் கதாநாயகியாக தனது பயணத்தை தொடங்கியவர் இப்போதும் கதாநாயகியாக வலம் வருகிறார்.

அடுத்தடுத்து படங்கள் நடிப்பார் என்று பார்த்தால் அவரைப் பற்றி நிறைய ஷாக்கிங் தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

பிரபலங்கள் நிறைய பேர் யூடியூப் பக்கம் திறந்து நிறைய பேட்டிகள் எடுத்து வருகின்றனர். அப்படி நடிகரும், இயக்குனருமான சித்ரா லட்சுமணன் சமீபத்தில் தனது யூடியூப் பக்கத்தில் ஒரு விஷயம் பகிர்ந்துள்ளார்.

நடிகை த்ரிஷா சினிமாவில் இருந்து விலகுவதாக வெளியான தகவல்கள் உண்மைதான்.

நானும் இது தொடர்பாக சில தயாரிப்பாளர்களிடம் பேசினேன், த்ரிஷா படங்களில் கமிட் ஆவதை முழுவதுமாக கைவிட்டுவிட்டார் என்று கூறியுள்ளார். கடந்த 24 ஆண்டுகளாக சினிமாவில் முன்னணி நாயகியாக வலம்வரும் த்ரிஷா எடுத்த இந்த முடிவு ரசிகர்களுக்கு ஷாக் கொடுத்துள்ளது.

# காட்டழகிய சிங்கர், மேட்டழகிய சிங்கர், ஆற்றழகிய சிங்கர் ஆகிய மூன்று நரசிம்மர்கள்

காட்டழகிய சிங்கர், மேட்டழகிய சிங்கர், ஆற்றழகிய சிங்கர் ஆகிய மூன்று நரசிம்மர்கள் அருள் புரியும் தலமாக விளங்குகிறது திருச்சி.



காட்டழகிய சிங்கர் கோவில் ஸ்ரீரங்கம் ரங்கநாதப் பெருமான் கோவிலில் இருந்து சுமார் ஒன்றரை கி.மீ தொலைவில் உள்ளது. இங்கு நரசிம்மர் எட்டு அடி உயரத்தில் காட்சி தருகிறார். பதினைந்து நூற்றாண்டுகள் பழமையான ஆலயமாகத் திகழ்கிறது. சுவாதி நட்சத்திரம் பெருமாளின் ஜென்ம நட்சத்திரம் அன்று பெருமாளுக்கு சிறப்பாக திருமஞ்சனம் செய்யப்படுகிறது. இந்த நாளில் வழிபடுவோர்களுக்கு கேட்ட வரம் கிடைக்கும், தீராத நோய் தீரும் என்பது நம்பிக்கை. பிரதோஷ நேரத்தில் இவரை வழிபட்டால் குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தை வரம் நிச்சயம் என்பது நம்பிக்கை. நினைத்த கோரிக்கைகளை நிறைவேற்றிவைக்கும் நரசிம்மப் பெருமாளுக்கு மிகவும் பிடித்தமான பானக நைவேத்தியம் இங்கே சிறப்பு. வெல்லம், சுக்கு, ஏலக்காய் முதலியவற்றை பெருமாள் சந்நிதியில் நைவேத்தியத்துக்குக் கொடுத்தால், சந்நிதியில் அர்ச்சகர்கள் பெருமாளுக்காக எடுத்து வைத்த தீர்த்தத்தில் பானகம் கரைத்து அதை பெருமாளுக்கு நிவேதனம் செய்து தருகிறார்கள். அந்த பானக பிரசாதத்தை பக்தர்களுக்கு வழங்கினால், பிரார்த்தனை நிறைவேறும் என்பது நம்பிக்கை.

#மேட்டழகிய சிங்கர்:

ஸ்ரீரங்கத்தில் உள்ள மற்றொரு முக்கியமான கோவில் மேட்டழகிய சிங்கர் கோவில். தரைமட்டத்தில் இருந்து உயர்த்தப்பட்ட இந்த ஆலயம், தாயார் சந்நிதிக்கு அப்பால் உள்ள மதில் சுவரைத் தாண்டியவுடன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இது சோழர்களால் கட்டப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த கோவிலின் சிறந்த அம்சம் முழுவதும் ஓவியங்கள் தான். அவை பெரும்பாலும் நாயக்கர்களால் வரையப்பட்டவை. கம்பராமாயண அரங்கத்தின்போது அதைக் கேட்டு மகிழ்ந்தவர் இவர். அதனால் தான் கம்பர், வால்மீகி ராமாயணத்தில் இல்லாத இரணியன் வதைப்படலத்தை கம்பராமாயணத்தில் சேர்த்தாகப் பெரியோர்கள் கூறுவர்.

திருச்சி, சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து 10 நிமிட நடைபயணத்தில் இந்தக் கோவில் உள்ளது. திருச்சி சிந்தாமணி அண்ணாசிலையிலிருந்து, ஸ்ரீரங்கம், திருவானைக்கா நோக்கி வண்டிகளில் பயணம் செய்வோர், காவிரி புதுப்பாலத்தின் மேல் ஏறாமல் அதற்கு சற்று முன்பே, வலதுபுறமாக கீழிறங்கி திரும்பிச் செல்லும் தனி வழிபாதையில் 200 அடிகள் சென்றால் உடனடியாக இந்தக்கோவிலை அடையலாம்.

காவிரி நதியை ஒட்டி சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பே கோவில் கொண்டுள்ள ஸ்ரீ ஆற்றழகிய சிங்கப்பெருமாளை வேண்டினால், திருமணத் தடை விலகும் என்பது ஐதீகம். இக்கோவிலின் பின்புறக்கதவைத் திறந்து ஒரு ஐந்து படி இறங்கினால் போதும், பெருமகிழ்ச்சியுடன் பொங்கிப் பெருகிவரும் காவிரியில் நாம் இறங்கிப் புனித நீராடிட முடியும். சுவர்க்கத்தின் வாசல் போன்ற கோவிலின் பிரதான நுழைவாயிலுக்குள் செல்லும் நமக்கு இடதுபுறம் கருடனும், வலது புறம் ஹனுமனும் காட்சியளிக்கிறார்கள்.

இந்த மூன்று நரசிம்மர்களையும் ஒரே நாளில் தரிசனம் செய்தால், வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழலாம் என்பது நம்பிக்கை.

காட்டழகியசிங்கர்
மேட்டழகியசிங்கர்
ஆற்றழகியசிங்கர்

முனைவர் **பாலசந்தர்**
மண்ணச்சநல்லூர்

# சித்தரஞ்சன் தாஸ் வரலாறு

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் (நவம்பர் 5, 1870 - ஜூன் 16, 1925) இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கை ஆற்றியவர்.

தேசபந்து சித்தரஞ்சன் தாஸ் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர். 1917- ஆம் ஆண்டிலிருந்து 1925- ஆம் ஆண்டு வரை தீவிர அரசியலில் ஈடுபட்டவர். இவர் பூபன் மோகன் தாஸ் என்பவருக்குப் பிறந்தார். இங்கிலாந்தில் சட்டக் கல்வி கல்வி கற்றவர், 1909இல் அலிப்பூர் குண்டுவெடிப்பு வழக்கில் அரவிந்தருக்கு ஆதரவாக வெற்றிகரமாக வாதாடினார்.

இவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் அரசியல் குரு.

அவரது அரசியல் ஞானத்தாலும் பேச்சுத் திறமையாலும் அவர் இந்திய தேசிய காங்கிரஸில் முக்கியமான நபராக உயர்ந்தார். அவர் கிராமங்களை முன்னேற்றி கைத்தொழில்களை வளர்க்க விரும்பினார். சுய ராஜ்ஜியக் கட்சித் தலைவர். சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் வெறுத்தவர். பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். புகழ் பெற்ற வழக்கறிஞராக இருந்தபோதும் சுதந்திரப் போராட்டத்திற்காக தனது தொழிலைத் தியாகம் செய்தவர்.

இளமைக்காலம்

1870- ஆம் ஆண்டு நவம்பர் 5- ஆம் நாள் வங்காளத்தில் டாக்கா மாவட்டம் விக்ராம்பூரில் வசதியான குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை பூபன் மோஹன் தாஸ் கல்கத்தா நீதிமன்றத்தில் சட்ட ஆலோசகராகப் பணியாற்றினார். பூபன் தாஸ் சிறந்த அறிவாளி. பிரம்ம சமாஜத்தில் தீவிர நம்பிக்கை உடையவர். மிகுந்த நாட்டுப் பற்று உடையவர். சித்தரஞ்சன் தாஸ் நாட்டுப் பற்று உடையவராக விளங்கியதற்கு அவரது தந்தையே காரணம். சித்தரஞ்சன் தாஸ் அவரது முதல் மகன். அவருக்கு ஒரு தமக்கை உண்டு. சித்தரஞ்சன் தாஸ் கல்கத்தா பிரசிடென்சி கல்லூரியில் பட்டம் பெற்றார். பின்னர் 1890-இல் இங்கிலாந்து சென்று இந்தியக் குடிமைப் பணி தேர்வு எழுதினார். இந்தியா திரும்பி 1894-ல் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்ற ஆரம்பித்தார். அவரது இளைய சகோதரர் பி. ஆர். தாஸ் பாட்னா உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றினார். வங்கப்பிரிவினையின்போது அரவிந்தர், பிபின் சந்த்ர பாலுடன் இணைந்து "வந்தே மாதரம்" என்ற ஆங்கில இதழில் எழுதி வந்தார்.

அனுஷீலன் சமிதி

அரவிந்தரும் சித்தரஞ்சன் தாஸும் சுதந்திரப் போராட்ட புரட்சி இயக்கமான அனுஷீலன் சமிதியின் துணைத்தலைவர்கள் ஆவர். இவ்வியக்கம் இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கிழக்கு இந்தியாவின் முக்கிய ஆயுதம் ஏந்திய இயக்கம் ஆகும். ஆயுதப்புரட்சி மூலம் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தருவதே இதன் குறிக்கோள் ஆகும். ஜதீந்திரநாத் பானர்ஜி, ஜதீந்திரநாத் முகர்ஜி, யதீந்திர கோஷ் (அரவிந்தரின் இளைய சகோதரர்), ராஷ் பிஹாரி போஸ் ஆகியோர் இதன் முக்கிய உறுப்பினர்கள் ஆவர். சித்தரஞ்சன் தாஸ் ஐரோப்பிய இலக்கியத்தில் ஆர்வம் உடையவர். அவர் சாகர் சங்கீத், நாராயண்மாலா, கிஷோர்-கிஷோரீ, அந்தர்யாமி போன்ற இலக்கியங்களை எழுதியுள்ளார். மேற்கத்திய கல்விமுறை ஆத்மா முன்னேற்றத்திற்குப் பயனற்றது என்று கருதினார். பிரம்ம சமாஜ நூல்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர் நூல்கள் ஆகியவற்றை ஆழ்ந்து படித்தார். விவேகானந்தரின் கருத்துகள் இவரைக் கவர்ந்தன. புகழ்பெற்ற அறிஞர்களான பக்கிம் சந்திரர், D.L. ராய், கிரீஷ் கோஷ், இரவீந்திரநாத் தாகூர் போன்றவர்களின் நூல்களையும் அவர் ஆழ்ந்து படித்தார். எல்லோரும் கல்வி கற்க வேண்டியது அவசியம் என்று கருதினார். ஈஷ்வர் சந்த்ர வித்யா சாகரின் விதவை மறுமண இயக்கத்திற்கு உதவினார். அவர் 1890-லிருந்து 1894 வரை இங்கிலாந்தில் இருந்த காலத்தில் தாதாபாய் நௌரோஜிக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்தார். ஜான்மெக்கலன் என்பவரின் இந்திய விரோதப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து கிளாட்ஸ்டோன் தலைமையில் நடந்த கூட்டத்தில் பேசினார். அரவிந்தரின் அலிப்பூர் குண்டுவழக்கில் தாஸின் வாதத் திறமையால் அரவிந்தர் விடுவிக்கப்பட்டார். அதனால் அவரது புகழ் பரவியது. தும்ரோன் அரசரின் தத்தெடுப்பு குறித்த வழக்கிலும் அவர் வெற்றி பெற்றார். இவ்வாறாக அவர் சிவில், கிரிமினல் இரண்டிலுமே தேர்ச்சி பெற்றவராக விளங்கினார். 1920-ல் அவரது மாத வருமானம் ரூ.50,000 ஆகும். அவரது தந்தை தாராள குணத்தாலும், ஆடம்பரத்தாலும் திவாலாகி இருந்தார். 1913-ல் தாஸ் தனது தந்தையின் கடன்களை அடைத்தார். இது அவரது உயர்ந்த தர்ம நியாய உணர்ச்சியைக் காட்டுகிறது. 1921- ஆம் ஆண்டு விக்ராம்பூரில் நடைபெற்ற தேசிய கல்வி மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அதே ஆண்டு அஸ்ஸாம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றம், அஸ்ஸாம்-வங்காள ரயில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் போன்றவற்றிலும் கவனம் செலுத்தினார்.

அலிப்பூர் குண்டு வழக்கு

குதிராம் போஸ் என்ற இளைஞர் நாட்டுப்பற்று மிகுந்தவர். தனது 13-ஆவது வயதிலேயே சுதந்திரப் போராட்ட புரட்சி இயக்கமான யுகாந்தர் இயக்கத்தில் இணைந்தவர். வங்கப்பிரிவினையை எதிர்த்து நடந்த குண்டு வீச்சுகளில் தீவிரமாகப் பங்கு பெற்றவர். வங்காளத்தில் முசாபூர் நகரத்தில் அதிகாரியாகப் பணிபுரிந்த கிங்ஸ்போர்டு என்பவர் மீது குண்டுவீச குதிராம் போஸும் அவரது நண்பர் பிரபுல்ல சாஹியும் சென்றனர். 1908-ஆம் ஆண்டு ஏப்ரல் 30-ஆம் தேதி கிங்ஸ்போர்டின் வாகனத்தின் மீது குண்டு வீசினர். அந்த வாகனத்தில் வந்த வேறு ஒரு பெண்மணியும் அவரது மகளும் இறந்தனர். பிரபுல்ல சாஹி பிடிபட்ட உடன் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு இறந்தார். குதிராம் போஸ் 1908-ஆம் ஆண்டு ஆகஸ்டு 11-ஆம் தேதி தூக்கிலிடப்பட்ட போது அவரது வயது 18 ஆகும். அப்போதும் அவர் "வந்தே மாதரம்" என்றே முழங்கினார். இந்த வழக்கில் அரவிந்தரும் கைது செய்யப்பட்டார். ஆனால் தாஸின் வாதத் திறமையால் அரவிந்தர் விடுவிக்கப்பட்டார். 1921-ஆம் ஆண்டு அகமதாபாத் நகரில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேசத் தொண்டாற்றுவதற்காக புகழ்பெற்ற, திறமை வாய்ந்த வழக்கறிஞரான தாஸ் தனது தொழிலைத் துறந்தார். அவரது இந்த தன்னலமற்ற தியாகம் நாடுமுழுவதும் அவருக்கு இருந்த நன்மதிப்பை அதிகரித்தது. வேல்ஸ் இளவரசரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் சித்தரஞ்சன் தாஸ் மனைவி பசந்தி தேவி, மகன் சிரா ரஞ்சன், சகோதரி ஊர்மிளா தேவி, கிரண் சங்கர் ராய், சுபாஷ் சந்திர போஸ் ஆகியோருடன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 1922-ல் காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டதால் காங்கிரஸிலிருந்து விலகி சுயராஜ்ஜியக் கட்சி துவங்கினார்.

சுயராஜ்ஜியக் கட்சி

1923-ஆம் ஆண்டு ஜனவரி 9-ஆம் தேதி காந்திஜியை எதிர்த்த இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர்களால் சுயராஜ்ஜியக் கட்சி துவங்கப்பட்டது. இதில் முக்கியமானவர்கள் சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு(ஜவஹர்லால் நேருவின் தந்தை), நரசிம்ம சிந்தாமன் கேல்கர் (கேல்கர் மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்தவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பாலகங்காதரத் திலகருடன் நெருக்கமாகப் பணியாற்றியவர்.1910-ஆம் ஆண்டிலிருந்து 1932-ஆம் ஆண்டு வரை "கேசரி" இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார். திலகர் குறித்து பல நூல்கள் எழுதியுள்ளார்.), ஹூசேன் சாஹித் ஜராவார்டி(பின்னாளில் பாகிஸ்தான் பிரதமராகப் பணிபுரிந்தார்), நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், விதால்பாய் படேல் (வல்லபாய் படேலின் அண்ணன். இவரும் அமிதவாதப் போக்கு உடையவர். 1923-ஆம் ஆண்டு மத்திய சட்டமன்ற உறுப்பினராகவும், 1925-ஆம் ஆண்டு சபாநாயகராகவும் விளங்கினார். சுபாஷ் சந்திர போஸின் தேசப்பணிகளால் கவரப்பட்ட விதால்பாய் படேல் அவரது ரூ.1,20,000 மதிப்புடைய சொத்தை போஸின் தேசப்பணிகளுக்காகக் கொடுத்தார். ஆனால் காந்திஜி அந்தத் தொகையை காங்கிரஸ் கட்சியின் விருப்பத்திற்கேற்பதான் செலவிட வேண்டும் என்றார். போஸ் மறுத்ததால் வழக்கு நீதிமன்றம் சென்றது. உயில் தெளிவாக இல்லாததால் போஸ் அந்தத் தொகையை இழந்தார்.) போன்றோர் ஆவர். இவர்கள் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்றத்தில் அரசாங்கத்தின் நியாயமற்ற கொள்கைகளை எதிர்க்க நினைத்தார்கள். பிரித்தானிய ராஜ்ஜியத்திலிருந்து சுதந்திரம் பெற்று சுயராஜ்ஜியம் அமைப்பதே இவர்கள் குறிக்கோள் ஆகும். சித்தரஞ்சன் தாஸ் "ஃபார்வார்டு" என்ற பத்திரிக்கை ஆரம்பித்து சுபாஷ் சந்திர போஸிடம் ஒப்படைத்தார். 1924-ஆம் ஆண்டு நடைபெற்ற கல்கத்தா மாநகராட்சி தேர்தலில் சுயராஜ்ஜியக்கட்சி வெற்றி பெற்றது. மாநகராட்சி மேயராக சித்தரஞ்சன் தாஸும் மாநகராட்சி நிர்வாக அதிகாரியாக சுபாஷ் சந்திர போஸும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்கத்தா மாநகராட்சியில் பல சீர்திருத்தங்களைச் செய்து மக்களிடம் பேராதரவைப் பெற்றனர். சிறந்த செயல்பாட்டால் 1925-ஆம் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாராள குணம்

1925-ஆம் ஆண்டு ஜூன் 16 அன்று டார்ஜிலிங்கில் தனது 55-ஆவது வயதில் இறந்தார். அவரது உடல் கல்கத்தாவுக்குக் கொண்டுவரப்பட்டு மக்களின் மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. இரண்டு மைல் நீளத்திற்கு மக்கள் வெள்ளமாகத் திரண்டிருந்தனர். தாகூர் சித்தரஞ்சன் தாஸைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது அவரது தியாகமும் ஆக்கசக்தியும் நம்மை வழிநடத்தும் என்று கூறுகிறார். அவரது தாராள குணம் நினைத்துப் போற்றத்தக்கது. அவரது இல்லம் "சித்தரஞ்சன் சேவாசதன்" என்ற பெயரில் மருத்துவமனையாகச் செயல்படுகிறது.

மேற்கு வங்கத்தில் முக்கிய புள்ளியாக இருந்த இவர் 1919-1922 காலப் பகுதியில் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து பிரித்தானியரின் ஆடைகளைப் புறக்கணிக்க முன்னின்று உழைத்தார். மோதிலால் நேருவுடன் இணைந்து சுயாட்சிக் கட்சியை ஆரம்பித்தார்.

ஃபோர்வார்ட் (FORWARD) என்ற செய்திப் பத்திரிகையை பிரித்தானிய ஆட்சியாளருக்கு எதிராக ஆரம்பித்து நடத்தினார். இப்பத்திரிகை பின்னர் விடுதலை (LIBERTY) என்ற பெயரில் வெளியிடப்பட்டது. இவர் பல கவிதைகளையும் இயற்றியுள்ளார். இவரது கவிதைத் தொகுப்பு சாகர் சங்கீத் என்ற பெயரில் புகழ் பெற்றவை.



# காவல் நிலையங்களில் சிசிடிவி கேமரா செயல்படாத பிரச்சினைக்கு 2 வாரத்தில் தீர்வு: மத்திய அரசு உறுதி



**புதுடெல்லி, ஏப்.9:**

காவல் நிலையங்களில் சிசிடிவி கேமராக்கள் செயல்படாதது தொடர்பாக உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு பதிவு செய்துள்ளது. நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய உள்துறை செயலர் கோவிந்த் மோகன் ஆஜரானார்.

மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர். வெங்கட்ரமணியிடம், "இந்த விவகாரத்தில் மாநிலங்கள், யூனியன் பிரதேச பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிப்பதற்கு மத்திய உள்துறை உதவிச் செயலரை அனுப்புவது நல்லதா" என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர்.

மேலும் கேரள மாதிரியை ஏன் அனைத்து மாநிலங்களும் பின்பற்றக்கூடாது என்றும் கேள்வி கேட்டனர். இதற்கு மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் ஆர். வெங்கட்ரமணி, "மத்திய உள்துறை செயலர் தலைமையில் ஒரு வாரத்துக்குள் மீண்டும் சிறப்பு கூட்டம் நடத்தப்படும்" என்றார்.

இதையடுத்து நீதிபதிகள், "சிசிடிவி கேமராக்களை காவல் நிலையங்களில் பொருத்தும் விவகாரத்தில் உள்ள பிரச்சினைகள் 2 வாரத்துக்குள் களையப்படும் என்று மத்திய அரசு உறுதியளித்துள்ளது" என்றனர்.

# ரெப்போ வட்டி விகிதத்தில் மாற்றமில்லை! வீடு, வாகனக் கடன் வட்டி குறைய வாய்ப்பில்லை!

**புதுடெல்லி, ஏப்.9:**



வங்கிகளுக்கான குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் 'ரெப்போ ரேட்' எந்த மாற்றமுமின்றி 5.25% ஆகத் தொடரும் என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

மும்பையில் (ஏப். 8) ஆர்பிஐ ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் 6 உறுப்பினர்கள் அடங்கிய நிதிக் கொள்கைக் குழு கூட்டம் நடைபெற்றது. 2026 – 27 ஆம் நிதியாண்டில் நடைபெறும் முதல் கூட்டம் இதுவாகும். இந்த கூட்டத்தில் வட்டி விகிதத்தை மாற்ற வேண்டாம் என்று ஒருமனதாக முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி 'ரெப்போ ரேட்' எனும் வங்கிகளுக்கான குறுகிய கால கடனுக்கான வட்டி விகிதம் எந்த மாற்றமும் இன்றி 5.25% ஆகத் தொடரும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா அறிவித்துள்ளார்.

இதனால், வீடு, வாகனம், தனிநபர் கடன் உள்ளிட்ட கடன்களுக்கான வட்டி விகிதத்தில் மாற்றமிருக்க வாய்ப்பு இல்லை.

அதேபோல வங்கிகளில் நிரந்தர வைப்பு, தொடர் வைப்பு உள்ளிட்ட சேமிப்புத் திட்டங்களுக்கு வங்கிகள் அளிக்கும் வட்டியும் குறைக்காமல் அதே விகிதத்தில் தொடரும். நிலையான வைப்பு வசதி (எஸ்டிஎப்) மீதான வட்டி விகிதம் 5 சதவீதமாகவும் எம்எஸ்எப் வட்டி விகிதம் 5.50 சதவீதமாகவும் தொடர்கிறது.

உலகப் பொருளாதாரம் முன்பு இல்லாத அளவுக்கு சவால்களை எதிர்கொண்டு வருவதாகவும் அதேநேரத்தில் இந்திய பொருளாதாரம் வலுவான நிலையிலே இருப்பதாகவும் ஆளுநர் சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

# சபரிமலை கோயில் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் அரசு வாதம்

**புதுடெல்லி, ஏப்.9:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட அனுமதித்தது தொடர்பான மறு ஆய்வு மனுக்களை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான 9 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு நேற்று முதல் விசாரிக்க தொடங்கியுள்ளது.

மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா "சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் சென்று வழிபட அனுமதித்த தீர்ப்பில் பல்வேறு குறைபாடுகள் உள்ளன. மதத் தலைவர் நம்பிக்கை சார்ந்த விஷயம் என்று கூறிவிட்டால் அந்த மதத்தை பின்பற்றுவோர் அதை ஏற்று நடக்கின்றனர். மத நம்பிக்கை விவகாரங்களில் நீதிமன்றம் தலையிட முடியாது" என்றார். துஷார் மேத்தா இன்றும் தனது வாதங்களை முன்வைக்க உள்ளார்.

# ராஜஸ்தானில் ஜப்பான் சுற்றுலாப் பயணிக்கு பாலியல் துன்புறுத்தல் - 5 பேர் மீது வழக்குப் பதிவு

**ஜெய்ப்பூர், ஏப்.9:**

ஜெய்ப்பூரின் ஜெய்கர் கோட்டை அருகே, ஒரு ஜப்பான் சுற்றுலாப் பயணிக்கு ஐந்து நபர்கள் பாலியல் துன்புறுத்தல் அளித்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதில் தொடர்புடையவர்களை போலீஸார் தீவிரமாக தேடி வருகின்றனர்.

ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜெய்ப்பூர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை (ஏப்.5) காலையில், அம்பர் பகுதியில் அமைந்துள்ள ஜெய்கர் கோட்டையைப் பார்வையிடச் சென்ற ஜப்பான் சுற்றுலாப் பயணி, அங்கிருந்து அருகிலுள்ள கணேஷ் கோயிலை நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தபோது இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாக காவல் உதவி ஆணையர் சுரேந்திர சிங் தெரிவித்தார்.

"ஆட்கள் நடமாட்டம் இல்லாத ஒரு தனிமையான இடத்தைப் பயன்படுத்திக்கொண்ட ஐந்து நபர்கள், அந்தப் பெண்ணை வழிமறித்து, அவரிடம் அத்துமீறி நடந்துகொண்டதுடன், பாலியல் துன்புறுத்தலையும் அளித்தனர். உடனடியாக அந்தப் பெண் கூச்சலிட்டு உதவி கோரியதுடன், அங்கிருந்து தப்பித்து ஓடி, அருகிலிருந்த ஒரு பாதுகாப்பு ஊழியரிடம் நடந்ததை தெரிவித்தார். பாதுகாப்பு ஊழியர் வந்தவுடன் குற்றவாளிகள் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டனர்" என்று அவர் கூறினார். ஊழியர், உடனடியாகக் காவல் துறையினருக்குத் தகவல் அளித்ததைத் தொடர்ந்து, போலீஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அந்தப் பகுதியிலுள்ள சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், ஐந்து நபர்கள் மலையிலிருந்து கீழே இறங்கிச் செல்லும் காட்சி பதிவாகியுள்ளதாகவும், அவர்களை அடையாளம் காணும் முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் காவல் துறையினர் தெரிவித்தனர். ஜப்பான் சுற்றுலாப் பயணி அளித்த புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளதாகவும், குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக உள்ளூர் குற்றவாளிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் குறித்த ஆவணங்களை போலீஸார் ஆய்வு செய்து வருகின்றனர்.

# பாதுகாப்பு படையினருக்கு பயிற்சியளிக்கும் மாவோயிஸ்ட்கள்



**ராய்ப்பூர், ஏப்.9:**

சத்தீஸ்கர் மாநிலம் பஸ்தர் சரக காவல் துறை ஐ.ஜி. பி. சுந்தர்ராஜ் கூறியதாவது: பஸ்தர் சரகத்தில் உள்ள 7 மாவட்டங்களில் இருந்து சரணடைந்த 18 மாவோயிஸ்ட்கள் காங்கர் வனப்போர் பயிற்சி (சிடிஜேடபிள்யூ) கல்லூரியில் பாதுகாப்பு படையினருக்கு பயிற்சி அளிப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் பலர் மாவோயிஸ்ட் அமைப்பில் இருந்தபோது வெடிகுண்டுகளைக் கையாள்வதிலும், மற்றவர்களுக்குப் பயிற்சி அளிப்பதிலும் கைதேர்ந்தவர்களாக இருந்துள்ளனர். வனப் பகுதிகளில் மாவோயிஸ்ட்கள் கையாளும் தந்திரோபாயங்களை முறியடிக்க, தொழில்நுட்ப அறிவைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சுந்தர்ராஜ் கூறினார்.

# பெங்களூருவில் பட்டுப் புடவை வாங்க அதிகாலை 4 மணிக்கு வரிசையில் நிற்கும் பெண்கள்

**பெங்களூரு, ஏப்.9:**





கர்நாடக அரசின் பட்டுத் தொழில் கழகத்தின் சார்பில் விற்பனை செய்யப்படும் பட்டுப் புடவைகள் மிகவும் பாரம்பரியம் மிக்கவையாக கருதப்படுகின்றன. புவிசார் குறியீடு பெற்ற இந்த புடவைகளுக்கு பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருக்கிறது.

பெங்களூருவில் உள்ள கர்நாடக அரசின் பட்டுத் தொழில் கழகத்தின் விற்பனையகத்தில் புடவை வாங்குவதற்காக கர்நாடகாவை சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல் பிற மாநிலங்களை சேர்ந்தவர்களும் குவிந்து வருகின்றனர். வாடிக்கையாளர்களை கட்டுப்படுத்த முடியாததால் கடந்த 5 ஆண்டுகளாக வாடிக்கையாளர்ளுக்கு தலா ஒரு டோக்கன் மட்டுமே தரப்படுகிறது.

இந்த டோக்கனை வாங்குவதற்காக பெண்களும், ஆண்களும் முந்தைய தினம் இரவே கடை வாசலுக்கு வந்து வரிசையில் நிற்கின்றனர். தினமும் சுமார் 500 பேர் வரை அதிகாலை 4 மணி முதல் 10 மணி வரை 6 மணி நேரம் காத்திருந்து புடவைகளை வாங்கிச் செல்கின்றனர்.

10 நிமிடம் மட்டுமே அனுமதி: அங்கு வாடிக்கையாளர் கூறும் வண்ணத்தில் புடவைகளை விற்பனையாளர்கள் காண்பிக்கின்றனர். ரூ.20 ஆயிரம் முதல் ரூ.5 லட்சம் வரையிலான விலையில் பட்டுப் புடவைகளில் ஏதேனும் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும். ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு புடவை மட்டுமே வழங்கப்படுகிறது. வாடிக்கையாளர்கள் பல புடவைகளை பார்த்து, தேர்வு செய்வதற்கு அனுமதி இல்லை என நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளது.

# புதுச்சேரி சட்டசபை தேர்தல்: அரசு மற்றும் தனியார் கல்லூரிகளுக்கு 3 நாள் விடுமுறை

**புதுச்சேரி, ஏப்.9:**

புதுச்சேரி மாநில சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை (வியாழக் கிழமை) நடைபெற இருக்கிறது. தேர்தலை முன்னிட்டு ஏற்கனவே அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு 6-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது.

இந்தநிலையில் புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனாம் பகுதியில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் கல்லூரிக்கு இன்று முதல் வருகிற 10-ந் தேதி வரை 3 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட கலெக்டருமான குலோத்துங்கன் பிறப்பித்துள்ளார்.

# கச்சா எண்ணெய் விலை 15% சரிவு! டிரம்ப்பின் போர் நிறுத்த அறிவிப்பு எதிரொலி!

**புதுடெல்லி, ஏப்.9:**

அமெரிக்கா - ஈரான் இடையேயான போர் இரண்டு வாரங்களுக்கு நிறுத்தம் செய்யப்படும் என்றும், பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்றும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஒப்புதல் அளித்திருக்கிறார்.

இதன் எதிரொலியாக, கச்சா எண்ணெயின் விலை 15 சதவிகிதம் வரை சரிவைக் கண்டுள்ளது. இந்திய நேரப்படி காலை 7 மணியளவில், பிரென்ட் கச்சா எண்ணெய் விலை 13 சதவிகிதத்துக்கும் மேல் சரிந்து, ஒரு பீப்பாய் 94.94 டாலராக வர்த்தகமானது.

இதற்கிடையில், அமெரிக்க டபிள்யூடிஐ கச்சா எண்ணெய் விலை 14.60 சதவிகிதம் டாலர்கள் விலை சரிந்து ஒரு பீப்பாய் 96.46 டாலராகக் குறைந்துள்ளது.

அமெரிக்கா - ஈரான் இடையேயான போருக்கு முன்னதாக, ஒரு பீப்பாய் கச்சா எண்ணெயின் விலை 62 முதல் 65 டாலர் வரை வர்த்தகமாகி வந்தது.

போரால் ஏற்பட்ட தட்டுப்பாட்டால், பீப்பாய்க்கு 119 டாலர் என்ற உச்சத்தை எட்டிய நிலையில், மீண்டும் 100 டாலருக்கு கீழே இறங்கி வர்த்தகமாகி வருகிறது.

கச்சா எண்ணெய் விலை குறைவால், பெட்ரோல், டீசல் விலை மீண்டும் குறைக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

# விமானத்தில் வந்து தேர்தலில் வாக்களிக்க ரூ.2 லட்சம் வரை செலவு செய்யும் மலையாளிகள்



**திருவனந்தபுரம், ஏப்.9:**

அமெரிக்கா, ஈரான் இடையிலான போர் காரணமாக வளைகுடா நாடுகளில் விமான போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் இந்தியாவுக்கான விமான டிக்கெட் மிகக் கடுமையாக உயர்ந்திருக்கிறது. பொதுவாக ஐக்கிய அரசு அமீரக தலைநகர் அபுதாபி மற்றும் துபாய் உள்ளிட்ட நகரங்களில் இருந்து இந்திய நகரங்களுக்கு வருவதற்கு ரூ.10,000 முதல் ரூ.20,000 வரை விமான கட்டணம் வசூல் செய்யப்பட்டது.

போர் காரணமாக தற்போது விமான கட்டணம் ஒரு லட்சம் ரூபாய் முதல் 2 லட்சம் ரூபாய் வரை உயர்ந்திருக்கிறது. மிகவும் இக்கட்டான நேரங்களில் ரூ.2.5 லட்சம் வரைகூட விமான கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

எனினும் ஐக்கிய அரபு அமீரகத் தில் வசிக்கும் மலையாளிகள், கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து சொந்த ஊருக்கு திரும்பி வருகின்றனர். இதுதொடர்பாக முனீர் என்பவர் கூறும்போது, "கடந்த 19 ஆண்டுகளாக ஐக்கிய அரபு அமீரகத்தில் வசித்து வருகிறேன். ஒவ்வொரு தேர்தலின்போதும் கேரளாவுக்கு சென்று வாக்களிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன். தற்போதைய சட்டப்பேரவைத் தேர்தலுக்காக கேரளா செல்ல ரூ.2.3 லட்சத்துக்கு டிக்கெட் வாங்கி உள்ளேன். எவ்வளவு செலவானாலும் வாக்குரிமையை செலுத்துவதை கடமையாக கருதுகிறேன்" என்று தெரிவித்தார். ஐக்கிய அரபு அமீரகத்தின் அஜ்மான் நகரில் வசிக்கும் ஆஷா என்பவர் கூறும்போது, "கேரள சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த ஊருக்கு செல்ல திட்டமிட்டு உள்ளேன். இதற்காக ஒரு லட்சம் ரூபாய்க்கு விமான டிக்கெட் வாங்கி உள்ளேன். எனது தங்கை நிம்மியும் இதே தொகைக்கு விமான டிக்கெட் முன்பதிவு செய்திருக்கிறார்" என்றார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் சுமார் 10 லட்சம் மலையாளிகள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் விமான டிக்கெட்டுக்கு ரூ.2 லட்சம் வரை செலவு செய்து கேரளாவுக்கு திரும்பி வருகின்றனர்.

# 55 ஆண்டுகளுக்கு முன் பாகிஸ்தான் 2 ஆக உடைந்தது; ஆனால் இந்த முறை... ராஜ்நாத் சிங் எச்சரிக்கை

**கொல்கத்தா, ஏப்.9:**



மேற்கு வங்காளத்தில் மே 7-ந்தேதியுடன் அரசின் பதவிக்காலம் முடிவடைகிறது. இதனை முன்னிட்டு, மேற்கு வங்காள சட்டசபைக்கான தேர்தல் 2 கட்டங்களாக நடைபெறுகிறது. இதன்படி, ஏப்ரல் 23-ந்தேதி முதல் கட்ட தேர்தலும், 29-ந்தேதி 2-ம் கட்ட தேர்தலும் நடத்தப்படும். வாக்கு எண்ணிக்கை மே 4-ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இதனை முன்னிட்டு, கட்சிகள் தொகுதி பங்கீடு, வேட்பாளர் தேர்வு, பிரசாரம் உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. தேர்தலை முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன.

இந்த நிலையில், மேற்கு வங்காளத்தின் கொல்கத்தா நகரில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட மத்திய பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் பேசும்போது, பாகிஸ்தானின் பாதுகாப்பு மந்திரி கவாஜா ஆசிப், தூண்டி விடும் வகையிலான அறிக்கையை வெளியிட்டு இருக்க கூடாது என்றார். 55 ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் விளைவுகளை சந்தித்தனர். பாகிஸ்தான் 2 ஆக உடைந்தது என 1971-ம் ஆண்டு நடந்த போரை குறிப்பிட்டு அவர் பேசினார். அதன் விளைவாக வங்காளதேசம் உருவானது. அவர்கள் வங்காளத்தின் மீது ஒரு கண் வைத்தால், இந்த முறை பாகிஸ்தான் எத்தனை பகுதிகளாக உடையும் என்று கடவுளுக்கு மட்டுமே தெரியும் என்றார்.

பாகிஸ்தானின் பாதுகாப்பு மந்திரி கவாஜா ஆசிப் நேற்று கூறும்போது, இந்தியா இந்த முறை ஏதேனும் தவறான தாக்குதலை நடத்தினால், கடவுளின் ஆசியுடன், கொல்கத்தாவை நாங்கள் தாக்குவோம் என்று அவர் கூறியது சர்ச்சையானது.

# சமூக வலைதளங்களில் வரும் ஐபிஎல் விளம்பரத்தை நம்பாதீர்: ஹைதராபாத் காவல் ஆணையர் எச்சரிக்கை

**ஹைதராபாத், ஏப்.9:**



தற்போது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்று வரும் வேளையில், பல இடங்களில் கிரிக்கெட் சூதாட்டங்களும் இலைமறைகாயாக நடைபெறுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இதில் குறிப்பாக ஹைதராபாத்தில் பல சூதாட்டக்காரர்களை போலீஸார் கைது செய்து வருகின்றனர்.

நேற்று ஹைதராபாத்தில் நகர காவல் ஆணையர் சஜ்ஜனார் செய்தியாளர்களிடம் இது தொடர்பாக கூறியதாவது:

ஐபிஎல் கிரிக்கெட்டை சிலர் மூலதனமாக்கி கோடிக்கணக்கில் குறுக்கு வழியில் சம்பாதித்து வருகின்றனர். கிரிக்கெட் மீதுள்ள மோகத்தால் சாமானிய மக்கள் இதில் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். குறிப்பாக சமூக வலைத் தளங்கள் மூலம் வரும் போலி விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம்.

இந்த போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள்? எந்த அணி எத்தனை ரன் குவிக்கும்? என சரமாரியாக கேள்விகளால் மக்களை முதலில் ஈர்க்கிறார்கள். அதன் பின்னர் 'பெட்டிங்' மூலம் பணத்தை மக்களிடம் இருந்து கறந்து விடுகின்றனர். ஆதலால் யாரும் ஐபிஎல் கிரிக்கெட் தொடர்பான சமூக வலைதள விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார்.




## ஆலங்குளம் அருகே கள் இறக்கியதை தடுத்த எஸ்ஐயை தாக்கிய இளைஞர் துப்பாக்கியால் சுட்டுப்பிடிப்பு

**தென்காசி, ஏப்.09:** ஆலங்குளம் அருகே கள் இறக்கியதை கண்டித்ததால், காவல் உதவி ஆய்வாளரை தாக்கிய இளைஞர் துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்டார்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே உள்ள மருதம்புத்தூர் கிராமத்தில் பனை மரத்தில் இருந்து சட்டவிரோதமாக கள் இறக்குவதாக போலீஸாருக்குதகவல் கிடைத்ததால் ஆலங்குளம் காவல் உதவி ஆய்வாளர் இசக்கிராஜா நேற்று காலை அப்பகுதிக்குச் சென்று சோதனையில் ஈடுபட்டார்.

அப்போது, பனை மரத்தில் இருந்து இறங்கிய மருதம்புத்தூர் மேலத் தெருவைச் சேர்ந்த மணிகண்டன் (32) என்பவரிடம், உதவி ஆய்வாளர் விசாரணை நடத்தினார். இதில் வாக்குவாதம் ஏற்பட்டு ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டனர். இதனால், இசக்கிராஜா தற்காப்புக்காக தன்னிடம் இருந்த துப்பாக்கியால் மணிகண்டனை காலில் சுட்டுள்ளார். இது குறித்த தகவலின்பேரில், ஏடிஎஸ்பி சங்கர், காவல் ஆய்வாளர் ஆடிவேல் மற்றும் போலீஸார் விரைந்து வந்து, இருவரையும் தென்காசி அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மணிவண்ணன், மருத்துவமனைக்குச் சென்று, உதவி ஆய்வாளரிடம் நலம் விசாரித்து, நடந்த சம்பவங்களை கேட்டறிந்தார். மருத்துவமனையில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மோதலில் உதவி ஆய்வாளர் துப்பாக்கியால் சுட்ட சம்பவம் அந்தப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## மதுரை அருகே டூவிலரில் சென்ற 2 வாலிபர்கள் வெட்டிக்கொலை

**மதுரை, ஏப்.09:** மதுரை அருகே டூவீலரில் சென்ற இளைஞர்கள் இருவரை வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். மதுரை யா.ஒத்தக்கடை அருகே தேத்தாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் கடுகு (எ) முனியசாமி (24), மதுரை யாகப்பா நகரைச் சேர்ந்த மோகன்(25), மேலூர் அருகே பெருமாள்பட்டியைச் சேர்ந்த ஸ்டாலின்(26) ஆகிய மூவரும் ஒரே டூவீலரில் நேற்று மாலை ஒத்தக்கடை பகுதியில் சென்றனர். பட்டணம் கிராமப்பகுதி அருகே சென்றபோது, அவ்வழியாக காரில் வந்த மர்ம நபர்கள், டூவீலரை வழிமறித்து 3 பேரையும் அரிவாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் வெட்டினர்.

இதில், பலத்த காயமடைந்த கடுகு என்ற முனியசாமி, மோகன் ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இதுபற்றி தகவலறிந்து வந்த ஒத்தக்கடை போலீசார், உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், காயமடைந்த மற்றொரு நபரான ஸ்டாலின். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து புகாரின் பேரில் ஒத்தக்கடை போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

இதுகுறித்து போலீசார் கூறியதாவது : ஒத்தக்கடை பட்டணம் கிராமத்தில் கடந்த 3ம் தேதி அங்குள்ள விநாயகர் கோயில் குடமுழுக்கு விழா நடைபெற்றது. இந்த விழாவில், மேட்டுபட்டியைச் சேர்ந்த முத்துக்கருப்பு என்பவர் செருப்பு அணிந்து வந்ததற்காக, அவரை பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த சக்திமுருகன், அருள் உள்ளிட்டோர் தாக்கியுள்ளனர். இதுபற்றி முத்துக்கருப்பு தனது நண்பர்களான தேத்தாம்பட்டியைச் சேர்ந்த ஸ்டாலின், சவுந்தர் ஆகியோரிடம் தெரிவித்தார்.

இதையடுத்து, அவர்கள் இருவரும் பட்டணம் கிராமத்துக்குச் சென்று, முத்துக்கருப்பை தாக்கியதற்காக வசந்த் என்பவரை வெட்டியுள்ளனர். இந்தச் சம்பவத்தின் முன்விரோதம் காரணமாக பட்டணம் கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமி என்ற பொட்டுக்கடலை பெரியசாமி, அதே பகுதியைச் சேர்ந்த சக்தி முருகன், சபரிராஜன், அருள், ஆகியோர் காரில் சென்று, கடுகு என்ற முனியசாமி உட்பட 3 பேரையும் வெட்டியுள்ளனர். இதில் 2 பேர் பலியாயினர். சம்பவத்தில் தொடர்புடைய அனைவரும் விரைவில் கைது செய்யப்படுவர். இவ்வாறு கூறினர்.

## மதுபோதை தகராறில் பயங்கரம் டிரைவரை அடித்துக்கொன்று தீ வைத்து எரிப்பு

**திருமலை, ஏப்.09:** மதுபோதை தகராறில் டிரைவரை அடித்துக்கொன்று சடலத்தை தீ வைத்து எரித்துள்ளனர். இதுதொடர்பாக நண்பர்கள் 3 பேரை போலீசார் கைது செய்தனர்.திருப்பதி ரயில்வே குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் சீனிவாசலு, கார் டிரைவர். இவர் கடந்த மாதம் 28ம்தேதி திருப்பதி-தனப்பள்ளி சந்திப்பில் உள்ள மதுக்கடைக்கு சென்றார். அங்கு நண்பர்களுடன் சேர்ந்து மது குடித்துள்ளார்.

அப்போது அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் நண்பர்கள், சமாதானமாக போகலாம் எனக்கூறி சீனிவாசலுவை சீனிவாசமங்காபுரத்தில் உள்ள கல்லூரிக்கு பின்பகுதியில் இருக்கும் வனப்பகுதிக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அங்கு அவர்களுக்கு இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டுள்ளது. இதில் ஆத்திரமடைந்த நண்பர்கள், சீனிவாசலுவை சரமாரியாக தாக்கியுள்ளனர். இதில் அவர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். பின்னர் அவரது சடலத்தின் மீது பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரித்துள்ளனர்.

இதற்கிடையே சீனிவாசலு நீண்ட நேரமாக வீட்டிற்கு வராததால், அவரது குடும்பத்தினர் அக்கம்பக்கம் என பல்வேறு இடங்களில் தேடினர். பின்னர் திருச்சானூர் போலீசில் புகார் செய்தனர்.

அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அதில் சீனிவாசுலுவுக்கும், அவரது நண்பர்களுக்கும் மதுக்கடையில் தகராறு ஏற்பட்டதும், இதில் சீனிவாசலுவை அடித்து கொன்றுவிட்டு, சடலத்தை தீவைத்து எரித்ததும் தெரிய வந்தது. இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து கொலையாளிகள் 3 பேரை நேற்றுமுன்தினம் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

## பாலக்காடு ரயில் நிலையத்தில் 31 கிலோ கஞ்சா பறிமுதல்



**பாலக்காடு, ஏப்.09:** பாலக்காடு ரயில் நிலையத்தில் சந்தேகப்படும்படி 2 வாலிபர்கள் நடைமேடை இருக்கையில் நேற்று முன்தினம் அமர்ந்திருந்தனர். அப்போது கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த ரயில்வே போலீசார் மற்றும் போதை தடுப்புப்பிரிவு போலீசார் 2 பேரிடம் விசாரணை செய்து, அவர்களின் உடமைகளை சோதனையிட்டனர். இதில், 31 கிலோ கஞ்சா பொட்டலம் பேக்கில் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த வாலிபர்களிடம் நடத்திய தீவிர விசாரணையில், மலப்புரம் மாவட்டம், கடவநாட்டு பகுதியைச் சேர்ந்த ராகுல் (26), சுபீஷ் (26) என தெரியவந்தது. இவர்கள் வெளிமாநிலத்தில் இருந்து கஞ்சா பொட்டலங்களை வாங்கி வந்து கேரளாவில் விற்பனை செய்வது தெரியவந்தது. போலீசார் 2 பேரையும் கைது செய்து 31 கிலோ கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

# இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட மீனவர்கள் 30 பேர் சென்னை வந்தனர்



**சென்னை, ஏப்.09:** இலங்கை சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட ராமேசுவரம், காரைக்கால் மீனவர்கள் 30 பேர் சென்னை வந்தனர். தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள், அவர்களை வரவேற்று அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களை சேர்ந்த 30 மீனவர்கள், கடந்த 2 மாதங்களுக்கு முன்பு 3 விசைப் படகுகளில் பாம்பன் பகுதியில் இருந்து மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். இவர்களில் 21 மீனவர்கள்,தமிழகத்தின் ராமேசுவரம், 9 மீனவர்கள் காரைக்கால் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடலோர காவல்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக குற்றம்சாட்டி, 30 மீனவர்களையும் கைது செய்தனர். அவர்களின் விசைப்படகுகள், மீன்பிடி வலைகள், பிடித்து வைத்திருந்த மீன்கள் ஆகியவற்றையும் பறிமுதல் செய்து, இலங்கைக்கு கொண்டு சென்றனர். அந்நாட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 30 பேரையும் சிறையில் அடைத்தனர்.

இதுபற்றி தகவல் அறிந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்,மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி பிரதமர் நரேந்திர மோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகியோருக்கு கடிதம் எழுதினார். இதையடுத்து, இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள், இலங்கை அரசு அதிகாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியதை தொடர்ந்து, சில தினங்களுக்கு முன்பு 30 மீனவர்களையும் இலங்கை நீதிமன்றம் நிபந்னையுடன் விடுதலை செய்து உத்தரவிட்டது.

இதையடுத்து மீனவர்களை இந்தியாவுக்கு அனுப்ப இலங்கை இந்திய தூதரக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். அதன்படி, நேற்று காலை இலங்கை தலைநகர் கொழும்புவில் இருந்து, இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் 30 மீனவர்களும் சென்னை அனுப்பி வைக்கப்பட்டனர். சென்னை விமான நிலையத்தில், தமிழக மீன்வளத்துறை அதிகாரிகள், அவர்களை வரவேற்று, அரசு ஏற்பாடு செய்து இருந்த வாகனங்களில் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைத்தனர்.

# ஒப்பந்த செவிலியர்களுக்கு ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பு: உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்



**மதுரை, ஏப்.09:** தமிழகத்தில் ஒப்பந்த செவிலியர்களுக்கும் ஊதியத்துடன் மகப்பேறு விடுப்பு வழங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றத்தில் அரசு தெரிவித்துள்ளது.

மதுரை ஊமச்சிகுளத்தைச் சேர்ந்தவர் நந்தினி. இவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனு: துறையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மத்திய சுகாதாரத் திட்டத்தின்கீழ் ஒப்பந்த செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். அரசு ஊழியரான எனக்கு மகப்பேறுக்காக 270 நாட்கள் விடுப்பு வழங்க வேண்டும் என்ற விதிமுறை உள்ளது. இருப்பினும், எனக்கு 270 நாட்கள் விடுமுறை வழங்கவில்லை.

எனவே அரசு ஊழியர் மகப்பேறு விடுமுறை தொடர்பான அரசாணை அடிப்படையில் விடுமுறை வழங்க அரசுக்கு உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன். இம்மனுவை தனி நீதிபதி விசாரித்து, எனக்கு 270 நாட்கள் ஊதியத்துடன் மகப்பேறு விடுமுறை வழங்க உத்தரவிட்டார். இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரி சுகாதாரத் துறை செயலர் தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இதனை நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் அமர்வு விசாரித்தது. மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆர்.கருணாநிதி வாதிட்டார். அப்போது அரசு தரப்பில், ஒப்பந்த முறையில் பணியாற்றும் செவிலியர்களுக்கும் 6 மாதம் விடுப்பு தர அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கைமுடித்து வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# வடசென்னையில் ஆவின் பால் வினியோகம் பாதிப்பு

**சென்னை, ஏப்.09:** சென்னை மாதவரம் பால் பண்ணையில் இருந்து வடசென்னை பகுதி முழுவதும் ஆவின் பால் வினியோகம் செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களாக ஆவின் பால் வடசென்னை பகுதியில் குறைவாக வினியோகம் செய்யப்படுவதால் பொதுமக்களுக்கு தேவையான அளவு கிடைக்கவில்லை.

கடைகளில் உடனே விற்று தீர்ந்து விடுவதால் பொதுமக்கள் தனியார் பாலை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டு உள்ளது.

இந்த நிலையில் இன்று ஆவின் பால் வினியோகம் வடசென்னை பகுதியில் கடுமையாக பாதித்துள்ளது. பெரம்பூர், திரு.வி.க. நகர், கொளத்தூர், வியாசர்பாடி, கொருக்குப்பேட்டை, மாதவரம், கொடுங்கையூர், தண்டையார்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் ஆவின் பால் கிடைக்காமல் பொதுமக்கள் சிரமப்பட்டனர்.

மிகக் குறைந்த அளவிலேயே பால் வினியோகம் செய்யப்பட்டுள்ளது. மதியம் வழங்கக்கூடிய பால் வினியோகமும் குறைந்து உள்ளது. கடைகளில் ஆவின் பால் கிடைக்காமல் பொதுமக்கள் அவதிப்பட்டு வரும் நிலையில் இன்று தட்டுப்பாடு மேலும் அதிகரித்தது.

பால் வினியோகஸ்தர்களுக்கு வழக்கம் போல் வரக்கூடிய பாலின் அளவு குறைந்துள்ளது. இதனால் கடைகளுக்கு குறைந்த அளவிலேயே பால் பாக்கெட்டுகள் வழங்கப்பட்டதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். மாதவரம் பால் பண்ணையில் கடந்த சில நாட்களாக நீடித்து வரும் ஆவின் பால் தட்டுப்பாட்டிற்கு சரியான நடவடிக்கை எடுக்காமல் போனதே இந்த பாதிப்புக்கு காரணம் என்று தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர் நல சங்க மாநில தலைவர் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

மாதவரம்பால்பண்ணையில் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதத்துடன் முடிந்தது சோழிங்கநல்லூர் பால் பண்ணையில் தொழிலாளர்களுக்கான ஒப்பந்தம் எடுத்துள்ள அந்த ஒப்பந்ததாரருக்கு மாதவரம்பால்பண்ணையிலும் வழங்கப்பட்டது. அவரால் தேவையான தொழிலாளர்களை நியமிக்க முடியவில்லை. 50 பேர் செய்த பணிகளை 8 பேர் மட்டுமே தற்போது செய்து வருகின்றனர். இதனால் கடந்த சில நாட்களாக பால் வினியோகம் பாதிக்கப்பட்டது. வினியோகஸ்தர்களுக்கு தாமதாக வருகிறது.

தொழிலாளர்கள் பற்றாக்குறையை சரி செய்ய ஆவின் நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தால் விநியோகம் பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே ஒப்பந்த தொழிலாளர்கள் பிரச்சினைக்கு போர்க்கால அடிப்படையில் உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும். இந்த பிரச்சினைக்கு இன்று தீர்வு காணாவிட்டால் நாளை வடசென்னை பகுதி முழுவதும் பால் வினியோகம் முடங்கும் ஆபத்து உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# தங்கம் விலை மீண்டும் உயர்வு - எவ்வளவு தெரியுமா?

தங்கம் விலை ஒரு நாள் ஏறுவதும், மறுநாள் இறங்குவதுமான நிலையில் இருக்கிறது. அந்தவகையில் நேற்று முன்தினம் விலை அதிகரித்து இருந்த சூழலில், நேற்று விலை குறைந்து இருந்தது.

அதன்படி, நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 990-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 11 ஆயிரத்து 920-க்கும் விற் பனை செய்யப்பட்டது. நேற்றைய நிலவரப்படி, கிராமுக்கு ரூ.130-ம், சவரனுக்கு ரூ.1,040-ம் குறைந்து ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 860-க்கும். ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 10 ஆயிரத்து 880-க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,720 உயர்ந்து ரூ.1,13,600-க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.340 உயர்ந்து ரூ.14,200-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.265-க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# டிஎன்பிஎஸ்சி குரூப் 5ஏ தேர்வு முடிவு வெளியீடு



**சென்னை, ஏப்.09:** டிஎன்பிஎஸ்சி நடத்திய குரூப் 5 ஏ தேர்வு முடிவுகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழக அரசு பணியில் உள்ள இளநிலை உதவியாளர்கள் தலைமைச் செயலகத்தில் உதவி பிரிவு அலுவலர் மற்றும் உதவியாளர் பணிகளில் சேர்வதற்காக டிஎன்பிஎஸ்சி குரூப்-5ஏ தேர்வு நடத்தப்படுகிறது.

அந்த வகையில் உதவி பிரிவு அலுவலர், உதவியாளர் பதவிகளில் 32 காலியிடங்களை நிரப்பும் பொருட்டு குரூப்-5 ஏ தேர்வு கடந்த 2025-ம் ஆண்டு டிச.21-ம் தேதி நடைபெற்றது. விரிவாக விடையளிக்கும் வகையில் நடத்தப்பட்ட இத்தேர்வை 406 பேர் எழுதினர்.

இந்நிலையில் தேர்வு முடிவுகளை டிஎன்பிஎஸ்சி நேற்று வெளியிட்டுள்ளது. தேர்வர்கள் தங்கள் மதிப்பெண் மற்றும் தரவரிசை விவரங்களை தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) அறிந்து கொள்ளலாம் என டிஎன்பிஎஸ்சி செயலாளரும், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலருமான (பொறுப்பு) பானோத் ம்ருகேந்தர் லால் தெரிவித்துள்ளார்.

# நேரடி உயர் அதிகாரிகளின் உத்தரவை மட்டுமே போலீஸ் அதிகாரிகள் பின்பற்ற வேண்டும்: டிஜிபி உத்தரவு




**சென்னை, ஏப்.09:** நேரடி உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை மட்டுமே பின்பற்ற வேண்டும் என போலீஸ் அதிகாரிகளுக்கு தமிழக டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

தமிழக சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு ஏப்.23-ம் தேதி ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. தேர்தலை நேர்மையாக நடத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக போலீஸ் அதிகாரிகள் உள்பட பல்வேறு துறை அதிகாரிகள் அடுத்தடுத்து பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அதன்படி, தமிழக காவல்துறையில் சட்டம் - ஒழுங்கு டிஜிபி-யாக சந்தீப் ராய் ரத்தோர், தேர்தல் ஆணையத்தால் கடந்த வியாழக்கிழமை நியமிக்கப்பட்டார்.

அன்றைய தினம் இரவே பொறுப்பேற்றுக் கொண்ட சந்தீப் ராய் ரத்தோர், சட்டம் ஒழுங்கு மட்டும் அல்லாமல் தேர்தல் தொடர்புடைய பணிகளிலும் கவனம் செலுத்தி வருகிறார்.முதல் கட்டமாக வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக அதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தினார். இதில், சட்டம் ஒழுங்கு கூடுதல் டிஜிபி, மண்டல ஐஜி-க்கள், டிஐஜி-க்கள், மாவட்ட எஸ்பி-க்கள் கலந்து கொண்டனர். அப்போது, அவர் பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

குறிப்பாக, போலீஸ் அதிகாரிகள் தங்களுக்கு மேல் உள்ள அதிகாரிகளின் உத்தரவுகளை மட்டுமே பின்பற்ற வேண்டும். படிநிலை முறையை மீறக்கூடாது. தேவையற்ற தலையீடுகளைத் தவிர்க்க வேண்டும். வெளியிலிருந்து எந்த அதிகாரியாவது கட்டளையிட்டால் அல்லது அறிவுறுத்தினால், அதுகுறித்து என்னிடம் தகவல் தெரிவிக்கவும் என கண்டிப்புடன் அறிவுறுத்தி உள்ளார். தேர்தல் நேரத்தில் எவ்வித அரசியல் தலையீடு மற்றும் அரசியல் சார்பின்றி பணியாற்ற வேண்டும் எனவும் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் புத்தாண்டு தொடர் விடுமுறை: சென்னையில் இருந்து சிறப்பு பஸ்கள் இயக்கம்



**சென்னை, ஏப்.09:** வார விடுமுறை நாட்களோடு வருகிற 14-ந்தேதி தமிழ் புத்தாண்டு விடுமுறையும் வருவதால் வெளியூர் பயணம் அதிகரிக்க கூடும் என்பதால் அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன.

வழக்கமாக இயக்கப்படும் அரசு பஸ்களோடு கூடுதலாக சிறப்பு பஸ்கள் இயக்குவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 10 மற்றும் 11-ந்தேதியில் சிறப்பு பஸ்கள் 970, கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 190 பஸ்களும், மாதவரத்தில் இருந்து 24 பஸ்களும் விடப்பட்டுள்ளது.

இது தவிர பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பஸ்கள் இயக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வருகிற ஞாயிற்றுக்கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமையில் சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகள் தேவைக்கேற்ப 735 சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் நெரிசலை தவிர்க்கும் வகையில் www.tnstc.in மற்றும் மொபைல் ஆப் மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# வேன் மோதி இளம்பெண் பலி: பாதயாத்திரை பக்தர்கள் 3 பேர் படுகாயம்


**தூத்துக்குடி, ஏப்.09:** ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களை சேர்ந்த சுமார் 15 பெண்கள், கன்னியாகுமரிக்கு பாதயாத்திரை செல்லத் திட்டமிட்டனர். இவர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை ஒரு வேனில் ஏற்றி வந்ததோடு, 4 இருசக்கர வாகனங்களை உருட்டியபடி பாதயாத்திரை மேற்கொண்டு வந்தனர்.

நேற்று முன்தினம் இரவு கயத்தாறில் உள்ள ஒரு தனியார் பள்ளி வளாகத்தில் தங்கிய இந்தக் குழுவினர், நேற்று அதிகாலையில் மீண்டும் பயணத்தைத் தொடங்கினர். கயத்தாறு நான்கு வழிச்சாலை இணையும் பகுதியில் பக்தர்கள் சென்றுகொண்டிருந்தபோது, சென்னையிலிருந்து நாகர்கோவில் நோக்கி பர்னிச்சர் பொருட்களை ஏற்றிச் சென்ற வேன் ஒன்று எதிர்பாராத விதமாக பக்தர்கள் கூட்டத்திற்குள் புகுந்தது.

இந்தக் கோர விபத்தில் ராஜஸ்தானைச் சேர்ந்த சஞ்சு (வயது 27), சவுமியா(62), மஞ்சு(27) மற்றும் தீப்சி(52) ஆகிய 4 பேர் படுகாயமடைந்தனர். மேலும் இவர்களது வேன் மற்றும் இருசக்கர வாகனங்களும் பலத்த சேதமடைந்தன. விபத்தைக் கண்ட அக்கம் பக்கத்தினர், காயமடைந்தவர்களை மீட்டு நெல்லை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனின்றி இளம்பெண் சஞ்சு உயிரிழந்தார். மற்ற 3 பெண்களும் தொடர்ந்து மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த விபத்து குறித்து கயத்தாறு போலீசார் வழக்குப்பதிவு செய்து, வேன் டிரைவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தூத்துக்குடியில் காட்டுத்தீ: தீயணைப்பு வீரர்களின் துரித நடவடிக்கையால் பெரும் விபத்து தவிர்ப்பு



**தூத்துக்குடி, ஏப்.09:** தூத்துக்குடி மறவன்மடம் அருகே உள்ள காலி நிலங்களில் வளர்ந்திருந்த முள்செடிகள் நேற்று திடீரென தீப்பிடித்து எரியத் தொடங்கின. இதுகுறித்து சிப்காட் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. உடனடியாக சிப்காட் நிலைய அலுவலர் கார்த்திகேயன் தலைமையில், ஏட்டு இசக்கிராஜன், ஓட்டுநர் மணிகண்டன் மற்றும் தீயணைப்பு வீரர்கள் முத்துஜெயக்குமார், சாமுவேல் ஆகியோர் தீயணைப்பு வாகனங்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்னறனர்.

வெயிலின் தாக்கம் மற்றும் பலத்த காற்று காரணமாக தீ மளமளவென பரவி, பல ஏக்கர் நிலங்களை சூழ்ந்தது. தீ எரிந்த பகுதிக்கு அருகிலேயே பெட்ரோல் விற்பனை நிலையம் மற்றும் மர யார்டுகள் இருந்ததால் பெரும் ஆபத்து ஏற்படும் சூழல் உருவானது.

நிலைமையின் தீவிரத்தை உணர்ந்த தீயணைப்புத் துறையினர், உடனடியாக தனியார் ஜே.சி.பி. எந்திரத்தை வரவழைத்தனர். ஜே.சி.பி. மூலம் எரியாத முள்செடிகளை அப்புறப்படுத்தி தீ மேலும் பரவாமல் தடுத்தனர். பல மணி நேர போராட்டத்திற்கு பிறகு காட்டுத்தீ முற்றிலும் அணைக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்களின் இந்த சமயோசியமான நடவடிக்கையை பொதுமக்களும், வணிக நிறுவன உரிமையாளர்களும் வெகுவாக பாராட்டினர்.

இதுகுறித்து சிப்காட் நிலைய அலுவலர் கார்த்திகேயன் பொதுமக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில், "கோடை காலத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், பொதுமக்கள் மற்றும் தனியார் நில உரிமையாளர்கள் தாமாகவே முன்வந்து தங்கள் பகுதியில் உள்ள காய்ந்த முள்செடிகளை ஜே.சி.பி. மூலம் அகற்ற வேண்டும். இதன் மூலம் தீ விபத்துகளையும், பெரும் பொருள் சேதங்களையும் தவிர்க்கலாம். சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், தீயணைப்புத் துறையினரின் மீட்புப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

# குழந்தையின் பாலினத்தை கண்டறிந்து கருக்கலைப்பில் ஈடுபட்ட 2 பெண்கள் கைது

**தர்மபுரி, ஏப்.09:** தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அருகே ரங்காபுரத்தில் சட்டவிரோதமாக கருவில் உள்ள குழந்தையின் பாலினம் ஆணா? பெண்ணா? என கண்டறிந்து கருக்கலைப்பில் ஈடுபடுவதாக தர்மபுரி மாவட்ட சுகாதார அலுவலருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து மாவட்ட சுகாதார அலுவலர் ராஜேந்திரன் தலைமையில் பென்னாகரம் வட்டார மருத்துவ அலுவலர் ராமதாஸ், சுகாதார ஆய்வாளர்கள் பசுபதி, ரவீந்தர், வசந்த பாலன் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த மருத்துவ குழுவினர் ரங்காபுரத்திற்கு சென்றனர்.

அங்கு செந்தில் என்பவரது வீட்டை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது கருவில் உள்ள குழந்தை ஆணா?, பெண்ணா? என கண்டறியும் உபகரணங்கள் மற்றும் கருக்கலைப்பு மாத்திரைகள் இருந்தது தெரிய வந்தது. இதையடுத்து அங்கிருந்த மாத்திரைகள் மற்றும் உபகரணங்களை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து நடத்திய விசாரணையில்,ரங்காபுரத்தை சேர்ந்த செந்தில் மகள் பரிமளா (34 வயது). இவர் டிப்ளமோ நர்சிங் படித்துவிட்டு கருவில் உள்ள குழந்தையின் பாலினம் கண்டறிந்து கூறி வந்துள்ளார். இவர் ஆதனூர் கிராமத்தை சேர்ந்த சாந்தி (47 வயது) என்பவர் உதவியோடு கருக்கலைப்பில் ஈடுபட்டு வந்ததும் தெரிய வந்தது.

இதனையடுத்து மாவட்ட சுகாதார அலுவலர் ராஜேந்திரன் அளித்த புகாரின் பேரில் பென்னாகரம் போலீசார் பரிமளா, சாந்தி ஆகிய இருவரையும் கைது செய்தனர். பின்னர் அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளையான்குடி பகுதியில் திமுக வேட்பாளர் தமிழரசி பிரச்சாரம்





**மானாமதுரை, ஏப்.09:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தனி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் திமுக வேட்பாளர் தமிழரசி இளையான்குடி தெற்கு ஒன்றியத்தில் உள்ள ஏராளமான கிராமங்களில் பிரச்சாரம் செய்து வாக்குகளை சேகரித்தார். பல கிராமங்களில் ஏராளமான பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.

அப்போது அவர் பேசியதாவது கடந்த ஐந்து ஆண்டுகளில் இளையான்குடி பகுதியில் அனைத்து கிராமங்களிலும் பயணிகள் நிழற்குடை, கூடுதல் பள்ளி கட்டிடங்கள், வேளாண் விரிவாக்க மையம், கிராமங்கள் முழுவதும் கூடுதல் பஸ் வழி தடங்களில் போக்குவரத்து ஏற்படுத்தி கொடுத்துள்ளேன்.

இனி வரும் ஆண்டுகளில் கிராம மக்களின் அடிப்படை வசதிகள் மற்றும் 2026 சட்டமன்ற தேர்தல் அறிக்கையில் நம் கழக தலைவர் அறிவித்தது உள்ள திட்டங்கள் முழுவதும் இங்கே செயல்படுத்திட தயாராக உள்ளேன். என பேசினார் உடன் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை சித்திரை திருவிழா முன்னிட்டு எல்லை பிடாரி கோவிலில் கொடியேற்றம்





**மானாமதுரை, ஏப்.09:** சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வைகை ஆற்று கரையில் சிவகங்கை தேவஸ்தானம் நிர்வாகத்திற்குட்பட்டஸ்ரீ ஆனந்த வல்லி சோமநாதர் கோவில், வீர அழகர் கோவில் உள்ளது. மதுரையில் நடைபெறுவது போல் மானாமதுரையில் சித்திரை திருவிழா 10 நாட்கள் நடைபெறும். சித்திரை திருவிழா முன்னிட்டு முன்னதாக மானாமதுரை நகர் எல்லையில் உள்ள எல்லை பிடாரி அம்மன் கோவிலில் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆனந்த வல்லி சோமநாதர் கோவிலில் இருந்து சிம்ம வாகனத்தில் அம்மன் அலங்காரம் செய்யப்பட்டு கோவில் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

முக்கிய நிகழ்ச்சியான கண் திருஷ்டி மற்றும் நோய்கள் ஏற்படாமல் இருக்க பக்தர்கள் செய்யும் மாவிளக்கு பூஜை வரும் ஏப்ரல் 14 தமிழ் புத்தாண்டு செவ்வாய் கிழமை நடைபெறுகிறது. இதில் மானாமதுரை பகுதியில் உள்ள ஏராளமான பக்தர்கள் மாவிளக்கு வழிபாடு செய்வார்கள். அதைத் தொடர்ந்து மானாமதுரையில் சித்திரை திருவிழா ஏற்பாடுகள் நடைபெறும்.

# கீழக்கிடாரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் தேசிய திறனாய்வுத் தேர்வில் சாதனை..!




**இராமநாதபுரம், ஏப்.09:** இராமநாதபுரம் மாவட்டம் கடலாடி ஒன்றியம் கீழக்கிடாரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவர்கள் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான தேசிய திறனாய்வுத் தேர்வில் 6 பேர் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

ஈ.ஜுமைலத் பாத்திமா, சா.சாமிநாதன், ச.ஆஃபியா நூரா, மு.சஞ்சீவ், சே.முகம்மது ஜியாத், செய்யது இபுராஹிம் ஆகிய 6 மாணவர்கள் வெற்றி பெற்று வருடம் தலா ₹12000 வீதம் 4 வருடங்களுக்கு ₹48000 பெற உள்ளார்கள். தேசிய திறனாய்வுத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை தலைமை ஆசிரியை L.கலைச்செல்வி, ஆசிரியர்கள், கல்விக் குழு உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராமப் பொதுமக்கள் பாராட்டினர்.

## அரசியல் கார்னர்

# தேர்தல் பிரச்சாரம் ஓய்ந்தது: புதுச்சேரி, கேரளா, அசாமில் நாளை வாக்குப்பதிவு



**புதுடெல்லி, ஏப்.09:** புதுச்சேரி, கேரளா, அசாம் ஆகிய 3 மாநிலங்களில் ஒரே கட்டமாகச் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் முடிந்தது. இந்த 3 மாநிலங்களிலும் நாளை வாக்குப் பதிவு நடைபெறு கிறது.

புதுச்சேரி: புதுச்சேரியில் மொத்தம் 30 தொகுதிகள் உள்ளன. இந்தத் தேர்தலில் ஆளும் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக - அதிமுக - லஜக ஒரு அணியாக வும், காங்கிரஸ் - திமுக - விடுதலைச் சிறுத்தைகள் ஒரு அணியாகவும் மோதுகின்றன. இந்திய கம்யூனிஸ்ட் ஒரு தொகுதியிலும், மார்க்சிஸ்ட் 2 தொகுதிகளிலும் தனியாக போட்டியிடுகின்றன.

தவெக கூட்டணி 30 தொகுதிகளிலும் போட்டியிடுகிறது. நாம் தமிழர் கட்சி 28 தொகுதிகளில் தனித்துப் போட்டியிடுகிறது. மாஹே, ஏனாம் தொகுதிகளில் போட்டியைத் தவிர்த்துள்ளது. இதைத் தாண்டி பிரதான கட்சிகளில் சீட் கிடைக்காத முக்கிய பிரமுகர்கள் சிலரும் பல்வேறு தொகுதிகளில் சுயேச்சையாக களமிறங்கியுள்ளனர். புதுச்சேரி தேர்தல் களத்தில் மொத்தம் 117 சுயேச்சைகள் உட்பட 294 வேட்பாளர்கள் உள்ளனர்.

கேரளா: கேரளாவில் மார்க்சிஸ்ட் தலைமையிலான ஆளும் இடது ஜனநாயக முன்னணி, காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. அந்த மாநிலத்தில் மொத்தம் 140 சட்டப்பேரவைத் தொகுதிகள் உள்ளன. ஆளும் இடது ஜனநாயக முன்னணியில் மார்க்சிஸ்ட் 86 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளன.

ஐக்கிய ஜனநாயக முன்னணியில் காங்கிரஸ் 95, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 27 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. இதர தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன. தேசிய ஜனநாயக கூட்டணியில் பாஜக 115 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இதர தொகுதிகள் அதன் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

அசாம்: அசாமில் ஆளும் பாஜக - காங்கிரஸ் இடையே நேரடி போட்டி நிலவுகிறது. அந்த மாநிலத்தில் 126 தொகுதிகள் உள்ளன. ஆளும் தேசிய ஜனநாயக் கூட்டணியில் பாஜக 89 தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதன் கூட்டணி கட்சியான அசாம் கண பரிஷத் 26, போடோலேண்ட் மக்கள் முன்னணி 11 தொகுதிகளில் போட்டியிடுகின்றன.காங்கிரஸ் தலைமையிலான அசாம் சோன்மிலிட்டோ மோர்ச்சோ கூட்டணியில் காங்கிரஸ் 95 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

அதன் கூட்டணி கட்சியான ராய்ஜோர் தல் 16, அசாம் ஜாதிய பரிஷத் 10 தொகுதிகளில் போட்டியிடுகின்றன. மீதமுள்ள தொகுதிகள் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளன. பாஜக, காங்கிரஸ் கூட்டணியை தவிர்த்து திரிணமூல் 23, ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா 21, ஆம் ஆத்மி 14 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தி உள்ளன.

# "குடும்ப ஆட்சி, வாரிசு அரசியலுக்கு முற்றுப் புள்ளி வைப்போம்" - சென்னையில் இபிஎஸ் பிரச்சாரம்



**சென்னை, ஏப்.09:** "குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் இந்த நாட்டுக்கு தேவையா? வரவிருக்கும் தேர்தலில் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டையில் அமமுக வேட்பாளரை ஆதரித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரச்சாரம் செய்தார். இது குறித்து அவர் பேசும்போது, "திமுக ஆட்சியில் விலைவாசி கடுமையாக அதிகரித்துள்ளது. இந்த ஆட்சி தொடர வேண்டுமா?

திமுக குற்றவாளிகளுக்கு ஆதரவாக செயல்படுகிறது. அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் 'யார் அந்த சார்?' என கண்டுபிடிக்கப்படும். திமுக ஆட்சியில் தரமான வடிகால் வசதி செய்யப்படவில்லை. அதனால்தான் சென்னை மக்கள் மழைக்காலங்களில் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். ஊழல் செய்வதுதான் திமுகவின் முதன்மையான வேலையாக இருக்கிறது.

திமுக கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதா? நான்கில் ஒரு பங்கு வாக்குறுதிதான் நிறைவேற்றப்பட்டுள்ளது. கல்விக் கடன் ரத்து செய்யப்படவில்லை. காஸ் சிலிண்டருக்கு மானியம் வழங்கப்படவில்லை. ரேசன் கடைகளில் ஒரு கிலோ சர்க்கரை அதிகமாக போடுவதாகச் சொன்னார்களே போட்டார்களே?

தமிழகத்தில் கஞ்சா புழக்கம் அதிகரித்துள்ளது. கஞ்சா விற்பவர்களுக்கு திமுக அரசே துணை நிற்கிறது. மொத்தத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. அதிமுகவில் கொண்டுவரப்பட்ட திட்டங்களை திமுக நிறுத்தி வைத்திருக்கிறது. அதிமுக ஆட்சி அமைந்தவுடன் 3 மாதங்களில் கஞ்சா ஒழிக்கப்படும். மின்கட்டணம் அதிகமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வீட்டுவரி உயர்த்தப்பட்டுள்ளது. நாட்டில் குப்பைக்கும் வரிபோட்ட ஒரே ஆட்சி திமுக தான். கருணாநிதி குடும்பம் வளமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே நடைபெறும் குடும்ப ஆட்சி, வாரிசு அரசியல் இந்த நாட்டுக்கு தேவையா? . வரவிருக்கும் தேர்தலில் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்" இவ்வாறு அவர் பேசினார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM